பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 04 செவ்வாய்க்கிழமை 20.07.2021 கதிர் 257

## இது ரகசியம் அல்ல!

யாரை விட்டது ஆசை?

முற்றும் துறந்த முனிவர்களையே ஆசை ஆட்டிப் படைக்கும் போது, சாதாரண மனிதர்களை - அதுவும் அரசியலில் பதவி வகிப்பவர்களை -அது சும்மா விடுமா? அதுவும் அந்த பதவி ஆசை சும்மா விலகுமா?

2

# நாட்டை அழிக்கும் ஒடுக்குமுறை அரசை வீட்டுக்கு விரட்டுவோம்!

## நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் எதிரணி மாபெரும் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை முன்வைத்தும் அரசுக்கு எதிராகவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் நேற்றுக் காலை நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

2

## யார் தேச பக்தர்? யார் துரோகி? நாட்டுக்கு இன்று தெரிய வரும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இன்றைய வாக்கெடுப்பில் மக்கள் உண்மையான தேச பக்தர்களையும் துரோகிகளையும்

2

## கம்மன்பில மீதான பிரேரணைக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் பேராதரவு

### தலைவர் சம்பந்தன் அறிவிப்பு



வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிக்கும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான

2

## தூத்துக்குடிக்கு நீர்மூழ்கிக் கப்பல் நகர்த்தலா? கருத்துத் தெரிவிக்க இந்தியத் தூதரகம் மறுப்பு

கொழும்பு,ஜூலை20

இந்தியா தனது நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை தூத்துக்குடிக்கு நகர்த்தி உள்ளது என்று ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் கருத்து

2

## யாழில் நேற்றும் இருவர் கொரோனோவால் சாவு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் இருவர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

2

## 1,487 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று

இலங்கையில் நேற்று 1,487 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

2

## மேலும் 48 பேர் சாவு; மொத்தக் காவு 3,827

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 48 பேர் சாவடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 827

2



## இனி இது......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி பதவியில் ஒரு தடவை தான் இருப்பேன் என்று கூறி அதிகாரத்துக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அப்பதவியில் இரண்டு ஆண்டுகள் முடிய முன்னரே இன்னும் - மூன்று ஆண்டுகள் இருக்கையிலேயே - அடுத்த பதவிக்காலத்தில் மீதான தனது நப்பாசையை அவிழ்த்துக் கொட்டியிருக்கிறார்.

இது விடயத்தில் அவர் கொஞ்சம் better என்பேன். இதற்கு முன்னர் இப்பதவிக்கு வந்த பலரும் - சந்திரிகா, மஹிந்தர், மைத்திரி போன்றோர் - நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையையே ஒழிப்போம் என்று கூறி அதிகாரத்துக்கு வந்த பின்னர் அதை மறந்து இரண்டாம் தடவையும் அதிகாரத்தைத் தக்க வைக்கவே முயன்றனர்.

அந்த வரிசையில் கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பேன் என்று கூறி பதவிக்கு வந்தவர் அல்லர். ஒரு தடவைதான் ஆட்சியில் இருப்பேன், பின்னர் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்று விடுவேன் என்றார். இப்போது பதவிக் கதிரையின் சுகத்தை அனுபவிக்கத் தொடங்கியதும் அதை விட எண்ணமில்லாமல் துடிக்கின்றார். இந்த ஐந்து வருடங்களைத் தாண்டி இன்னொரு ஐந்து வருடங்கள் பதவியில் தொடரும் பற்று அவரைப் பிடித்துக் கொண்டுவிட்டது.

ஆனால், அரசும், ஆட்சிமுறை நிர்வாகமும் போகின்ற போக்கில் இன்னொரு தடவை ஆட்சியில் அவர் அமர்வது என்பது பகல் கனவாகதான் இருக்கும். அடுத்த ஜனாதிபதி தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ எது நடந்தாலும் மொட்டு கருகி விடும் என்பதுதான் கள நிலைமை. அத்தகைய அதிருப்தி அலை தென்னிலங்கையில் மெல்ல வீசத் தொடங்கியிருக்கிறது. தேர்தல் நெருங்கும் போது அந்த அதிருப்தி அலை சூறாவளியாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மீண்டும் தேர்தல் என்ற சகதிக்குள் இறங்குவது என்று கோட்டாபய தீர்மானித்து விட்டமையால் திரும்பவும் பௌத்த, சிங்களப் பேரினவாதத் தீக்குத் தொடர்ந்து எண்ணை ஊற்றப்படும். பேரினவாத வெறி மீண்டும் பீறிட்டுப் பாயும். பௌத்த, சிங்கள வாக்குகளை மடக்குவதற்காக இனவாத நடவடிக்கைகள், செயற்பாடுகள், ஆக்கிரமிப்புகள் திரும்பவும் எழுச்சி பெறும்.

தமிழர் தாயகத்தையும், தனித்துவத்தையும் சின்னாபின்னமாக்கிச் சிதற அடிப்பதன் மூலம் பேரினவாத வாக்குகளைச் சுருட்டலாம் என்ற தனது இனவாதப் போக்குத் திட்டத்தை முழுமூச்சில் திரும்பவும் கட்டவிழ்ப்பார் அதி உத்தமர்.

எனினும் இவற்றின் மூலம் கடந்த தடவை போல பௌத்த, சிங்கள வாக்குகளை அவரால் அள்ள முடியாது என்பதுதான் தென்னிலங்கைக் கணிப்பீடு. ஒன்றரை வருடத்துக்கு உள்ளேயே தென்னிலங்கைச் சிங்கள மக்கள் கோட்டா அண்ட் கோவை அவ்வளவு தூரம் வெறுத்து விட்டார்கள். கோட்டாவுக்கு இப்போது இருக்கின்ற பிளஸ் பொயிண்ட் ஒன்று தான். எதிர்த்தரப்பில் அவருக்குப் போட்டியாக கரிஸ்மா உள்ள சிங்களத் தலைவர்கள் எவரும் இல்லை என்பதுதான் அது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அப்படி ஒரு தலைவர் தெற்கில் உருவாகுவாரேயானால் அவர் கோட்டாவை 'பூ' என்று ஊதித் தள்ளிவிட்டு இலகுவாக ஜனாதிபதிக் கதிரைக்கு முன்னேறி விடுவார்.

இந்த அரசின் போக்கு இப்படியே இருந்து, கோட்டாதான் ஆளும் தரப்பின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் எனின் 2015 போல தமிழர்கள் முக்கியத்துவம் பெறக்கூடிய ஒரு தேர்தலாக அது மாறும் என நம்பலாம்.

இதற்கிடையில், ஜோதிட நிலைமைகளின்படி ஆட்சித் தலைவருக்கு வியாழ திசை காரணமாக அடுத்த நவம்பர் மாதம் போறாத காலம் என்ற பேச்சு வேறு ஜோதிடர்கள் மட்டத்தில் அடிபடுவதும் அத்தரப்புக்கு வயிற்றைக் கலக்குகின்றதாம்.

எது,எப்படி என்றாலும், ஜனாதிபதி கோட்டாபயவின் இந்த அறிவிப்பு மூலம், பஸில் ராஜபக்ஷதான் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என்று கடந்த சில நாள்களாகப் பீற்றிக் கொண்டிருந்த அவரின் வால்கள் சிலரின் வாய்வீச்சு ஒட்ட அடக்கப்பட்டிருக்கின்றது என்பது உண்மை.

***

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பர். இது அரசியலுக்கும் பொருந்தும் போல.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடாக அரசியலுக்குள் நுழைந்து, அதன் மூலம் எம்.பியாகி, மேலே வந்தவர் ரிஷாத் பதியுதீன். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமின் காலை வாரி, தனிக்கட்சி அமைத்துத் தனித்துவத் தலைவரானார்.

இப்போது அவர் சிறை ஆஸ்பத்திரியில். தடுப்புக் காவலில் மருத்துவ சிகிச்சை. இன்று அவர் நாடாளுமன்றுக்குக் கூட்டி வரப்படக்கூடும்.

அவரை விடுவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரில் இருந்து எல்லோரும் கூப்பாடு போடுகின்றனர். ஆனால் அவரது கட்சி எம்.பிக்கள் அவரை புறம் ஒதுக்கிவிட்டு நேற்று நாடாளுமன்றத்தில் பஸில் ராஜபக்ஷ தரப்புடன் 'டீல்' போட்டுக் கொண்டிருந்தனர் என்று தகவல். இன்று நாடாளுமன்றத்தில் அரசின் அமைச்சர் ஒருவருக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கூண்டோடு அரசு பக்கம் சேர்ந்து வாக்களிக்க ரிஷாத் கட்சி எம்.பிகள் எல்லோரும் தயார். ஆஸ்பத்திரியில் தடுப்புக் காவலில் இருக்கும் ரிஷாத் மாத்திரம் தனியாக வந்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துவிட்டு போக வேண்டியது தான். முன்னர் ஹக்கீமுக்கு அவர் செய்ததை ஹக்கீம் பார்த்திருக்க வேண்டியவரானார். இப்போது தமது கட்சி எம்பிக்கள் தமக்கு அதையே செய்வதைப் பார்த்து வாளாவிருக்க வேண்டியவராகிறார் ரிஷாத் பதியுதீன். இதுதான் முற்பகல் செய்யின் பிற்பகல் விளைவது என்பதோ?

## நாட்டை அழிக்கும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் விலையை உயர்த்திய கமன்பிலாவை வெளியேற்றுவோம்! நிவாரணத்தைக் குறைத்து நாட்டை அழிக்கும் ஒடுக்குமுறை அரசை வீட்டுக்கு விரட்டுவோம்!! எனும் கருப்பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

அரசு தன்னிச்சையாக அதிகரித்த எரிபொருள் விலையை மீண்டும் குறைத்து, பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கேட்டுக்கொண்டனர்.

## கம்மன்பில மீதான .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

## யார் தேச பக்தர்? ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் நேற்று நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முழு நாட்டையும் இன்னல்களுக்கு உள்ளாக்கிய இந்த அரசை மக்கள் பலத்தால் வீட்டுக்கு அனுப்புவதற்காக நாங்கள் இந்தப் பயணத்தை ஆரம்பித்துள்ளோம்.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி கண்டதும் அடுத்ததாக அரசை வீட்டுக்கு அனுப்ப மிக முக்கியமான நடவடிக்கைகளை எடுப்போம் - என்றார்.

# கொழும்பில் தீவிரமடையும் 'டெல்டா' வைரஸ் தொற்று!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை




நாட்டில் 'டெல்டா' கொரோனா வைரஸின் தாக்கத்தை எதிர்கொண்டுள்ளது எனவும், கொழும்பு மாவட்டத்தில் 'டெல்டா' தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர் எனவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களில் 20 முதல் 30 சதவீதமானோர் 'டெல்டா' வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி இருக்கலாம். கொரோனாத் தொற்றாளர்களில் இருந்து எடுக்கப்பட்ட வைரஸ் மாதிரிகளைப் பரிசோதித்ததன் ஊடாக இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வடக்கிலும் டெல்டா தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்டமையைத் தொடர்ந்து இலங்கையில் அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த வைரஸ் பரவி இருக்கலாம்.

கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, காலி, மாத்தறை, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் டெல்டா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையால், ஏனைய பகுதிகளில் இந்த வைரஸ் பரவல் இல்லை என்று உறுதியாகக் கூறமுடியாது - என்றார்.

# இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இருவர் சிக்கினார்கள்

(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து வந்து மானிப்பாயில் தங்கியிருந்த இருவர் படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற வேளை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்த வேளை மானிப்பாய் பகுதியில் குறித்த இருவரும் திருமணம் செய்து வாழ்ந்து வந்துள்ளனர்.

இருவரும் இந்தியாவுக்குப் படகில் செல்லும் நோக்கில் ஊர்காவற்றுறைக்கு அண்மையில் உள்ள ஓர் மணல் திட்டுப் பகுதியில் மறைந்திருந்த வேளை கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருவரும் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாகவே இலங்கைக்குள் பிரவேசித்துள்ள போதிலும் நுழைவு விசாவின் காலம் கடந்த நிலையில் தற்போது திருட்டுத்தனமாக இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இருவரையும் குறித்த தீவுப் பகுதிக்குக் கொண்டு சென்று இறக்கி விட்டவர்கள் யார், எவரின் உதவியுடன் இந்தியாவுக்கான படகில் ஏறத் திட்டமிட்டனர் போன்ற மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

## 1,487 பேருக்கு நேற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 86 ஆயிரத்து 419 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 61 ஆயிரத்து 848 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 20 ஆயிரத்து 744 பேர் சிகிச்சை பெறுகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## தூத்துக்குடிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதனையும் தெரிவிக்க மறுத்து விட்டது.

இந்த விடயத்தை ஒட்டி செய்திகளை வெளியிட்ட ஊடகங்கள் அத்தகைய நீர்மூழ்கி கப்பல் நகர்த்தலுக்குச் சில காரணங்களையும் முன்வைத்துள்ளன. ஆனால் இத்தகைய செயற்பாட்டு விடயங்கள் குறித்து - குறிப்பாக இந்திய கடற்படையின் நகர்வுகள் பற்றிய விடயங்கள் குறித்து - இந்திய தூதரகம் பொதுவாகக் கருத்துக்களைத் தெரிவிப்பதில்லை என்று இந்தியத் தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஆனால் நீர்மூழ்கி கப்பல்கள் மற்றும் அதுபோன்ற தேசிய சொத்துக்களை நகர்த்துவது தொடர்பான முடிவுகள் செயற்பாட்டு நடவடிக்கைகள் போன்ற பல காரணிகளின் அடிப்படையில் இந்திய அதிகாரிகளினால் எடுக்கப்படும். அத்தகைய நடவடிக்கைகள் இந்தியாவைப் பாதுகாத்தல் மற்றும் இந்தியாவின் நலன்களைப் பேணுதல் போன்ற இலக்குகளை எட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் என்றும் தூதரக அதிகாரி கூறினார்.

## மேலும் 48 பேர் சாவு; ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக எகிறியுள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 48 பேரில் 28 ஆண்களும், 20 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 30 வயத்துக்குட்பட்ட ஒரு பெண்ணினதும், 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 05 ஆண்களினதும், 05 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

அத்துடன் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 23 ஆண்களினதும் மற்றும் 14 பெண்களினதும் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

## யாழில் நேற்றும் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தீவகம் வேலணையைச் சேர்ந்த சேர்ந்த 84 வயதுடைய ஆண் ஒருவரும், தெல்லிப்பழையைச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 115 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# பிள்ளையான் மற்றும் அமைச்சர் வியாழேந்திரனை பகிரங்க விவாதத்துக்கு ஆசிரியர் சங்கம் அழைப்பு



இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனையும், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையானையும் கல்வி தொடர்பாகப் பேசுவதற்காகப் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு பொதுச்செயலாளர் பொன்.உதயரூபன் அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு ரப் வழங்கும் செயற்றிட்டம் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்ட திட்டமெனவும், அது உலக வங்கியின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் நிலையில் அதனை அரசியல் நிகழ்வாகச் செயற்படுத்தப்படுவதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலவசக் கல்வியை வியாபாரமாக நடத்திய வியாழேந்திரனும், பல கல்விமான்களைக் கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றிய பிள்ளையானும் கல்விக்கொள்கைக்கு முரணாக இந்த ரப்களை தாங்கள் வழங்குகிறோம் எனத் தெரிவித்து வரும் கருத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத்தின் சமையலறை மூடல்

நாடாளுமன்ற சமையல் அறையில் ஊழியர் ஒருவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளமையால் அனைத்து ஊழியர்களும் கொவிட் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என நாடாளுமன்ற தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலைமையால் நாடாளுமன்ற சமையல் அறை முழுமையாக மூடப்பட்டுள்ளது.

ஊழியருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டமையால் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை சமையல் அறையில் உணவு சமைக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதென நாடாளுமன்ற உதவி செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற சமையல் அறையில் 5 பேர் வரையில் கடந்த நாள்களாக கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என உறுதி செய்யப்பட்டதென நாடாளுமன்ற அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பிரபல போதைப்பொருள் வியாபாரி மட்டக்களப்பில் மடக்கிப் பிடிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரபல போதைப்பொருள் வியாபாரி உட்பட மூவர் கும்புறுமூலை இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து நேற்று (திங்கட்கிழமை) மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு ஜெயந்திபுரம், இருதயபுரம், செட்டிப்பாளையம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர்களிடமிருந்து 100 கிராம் ஐஸ் போதைப்பொருளும், போதைப்பொருளைக் கடத்திச் செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸாரோடு இணைந்து மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போது இவர்கள் மூவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட போதைப்பொருள் வியாபாரியே மட்டக்களப்பு மாவட்டத்தில் சகல பிரதேசங்களுக்கும் ஐஸ் போதைப்பொருள் விநியோகஸ்தராகச் செயற்பட்டு வந்துள்ளார் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# சினோபோர்ம் மற்றும் ஸ்புட்னிக் வி போட்டவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல அனுமதியில்லை

இலங்கையில் கூடுதலாக பயன்படுத்தும் கொவிட் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் சீனாவின் தயாரிப்பான சினோபோர்ம் மற்றும் ரஷ்யாவின் தயாரிப்பான ஸ்புட்னிக் வி ஆகிய தடுப்பூசி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில் குறித்த இரண்டு தடுப்பூசிகளும் ஐரோப்பிய நாடுகளில் பாவனையில் இல்லை. இதற்கான அனுமதியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக இலங்கையில் 4.8 ஆக இருந்த வேலையின்மை தற்போது 5.5 வீதமாக அதிகரித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்த இலங்கையர்கள் பலரும் நாட்டுக்கு வந்த காரணத்தால் இந்த வீதம் உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் சுவாமி விபுலானந்தரின் 74 ஆவது சிரார்த்த தின நிகழ்வு



இலங்கைக்கு பெருமை சேர்த்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் சிரார்த்ததினம் பெரும்பாலான பகுதிகளில் நேற்று (திங்கட்கிழமை) நினைவு கூரப்பட்டன.

அந்தவகையில் சுவாமி விபுலானந்தரின் சிரார்த்த தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் கிழக்கு மாகாணத்தில் நேற்று நடைபெற்றன.

மேலும் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு – கல்லடி இராமகிருஷ்ணமிஷனின் வளாகத்திலுள்ள சுவாமி விபுலானந்தரின் சமாதியில், மலர் தூவப்பட்டு விசேட பூஜைகள் நடத்தப்பட்டன.

குறித்த நிகழ்வில் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச்சபைத் தலைவர் க.பாஸ்கரன், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷாயானந்தா உட்பட பலர் கலந்து கொண்டனர். அதன்பின்னர் மட்டக்களப்பு நகரிலுள்ள திருநீற்றுப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சுவாமி விபுலா னந்தரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, சுவாமியின் பாடல்கள் இசைக்கப்பட்டன.

இதில் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டது மின்சார சபை

அமைச்சரவை அங்கீகாரம் இல்லாமல், இலங்கை மின்சார சபை, சீன நிறுவனம் ஒன்றுடன் 67 மில்லியன் அமெரிக்க டொலருக்கான ‘செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு ஆலோசனை சேவைகள்’ ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது நடைமுறையில் உள்ள ரூபா பெறுமதியில் 1,330 கோடி ஆகும். நுரைச்சோலை ‘லக்விஜய’ ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 10 ஆண்டுகளில் இந்த ஒப்பந்தங்கள் சீனாவின் இயந்திர பொறியியல் கழகத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

அமைச்சரவை ஒப்புதல் இல்லாத காரணத்தினால் இந்த ஒப்பந்தத் தொகைகளில் சுமார் 2கோடி அமெரிக்க டொலர்களை அதாவது இலங்கை ரூபாயில் 400 கோடி ரூபா தொகையை, இலங்கை மின்சார சபையால் தீர்க்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லக்விஜய, மின்சார சபையால் முழுமையாகச் சொந்தமாக இயக்கப்படும் ஓர் ஆலையாக உருவாக்கம் பெற்று ஒரு தசாப்தத்துக்குப் பிறகும், அத்துடன் இலங்கையின் பொறியியலாளர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ள போதும், சீனத் தொழிலாளர்கள் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கு உதவி வருகிறார்கள் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம் ஒப்பந்தத்தில், சீன ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளம், அதிகமானதாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மூத்த முகாமையாளர்களுக்கு 16 ஆயிரம் அமெரிக்க டொலர் (30 லட்சம் ரூபா) முதல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு 6,500 அமெரிக்க டொலர் (12 லட்சம் ரூபா) வரை செலுத்த மின்சார சபை உடன்பட்டிருந்தது.

குறித்த சீன நிறுவனத்துடன், 46 லட்சம் அமெரிக்க டொலர் (ரூ. 915 மில்லியன்) மற்றும் 84 லட்சம் அமெரிக்க டொலர் (ரூ. 160 கோடி) மதிப்புள்ள இரண்டு ஒப்பந்தங்களிலும், 2019 ஆம் ஆண்டில் 67 லட்சம் அமெரிக்க டொலர் (ரூ. 130 கோடி) மதிப்புள்ள மற்றொரு ஒப்பந்தத்திலும், இலங்கை மின்சார சபை கையெழுத்திட்டுள்ளது.

இப்போது ஒக்ரோபர் 2021 இற்குப்பின்னர் அடுத்த இரண்டு ஆண்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்காகச் சீன நிறுவனம், இலங்கை மின்சார சபையுடன் பேச்சு நடத்தி வருவதாக கொழும்பின் செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

# 15 வயதுச் சிறுமி மரணம்: சிக்கலில் ரிஷாத் குடும்பம்

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதின் வீட்டில் பணி செய்த சிறுமி தீக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

அந்தச் சிறுமியின் உடலில் தீக்காயங்கள் ஏற்பட்டமை மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் பொரளை பொலிஸார், முன்னாள் அமைச்சர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சிறுமி நீண்ட காலகமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பிரேத பரிசோதனையில் வெளியாகியுள்ளது.

கடந்த சனிக்கிழமை முன்னாள் அமைச்சரின் வீட்டில் பணியாற்றியவர்களிடம் 6 மணித்தியாலத்துக்கும் அதிக நேரம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அத்துடன் ரிஷாத்தின் தாய் மற்றும் தந்தையிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விசாரணை மேற்கொள்ளப்பட்டது. நேற்று திங்கட்கிழமை அவரின் மனைவியிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ள போதிலும் அவர் திடீர் சுகவீனமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமையால் வைத்திய ஆலோசனைக் கமைய விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சிறுமியின் மரணத்துக்கான காரணம் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

இந்தச் சிறுமி தனது 15 வயதில் ரிஷாத்தின் வீட்டுக்குப் பணிப்பெண்ணாக வருகை தந்துள்ளார். இதேவேளை, குறித்த சிறுமி கடந்த 8 மாதங்களாக வீட்டுக்குச் செல்லவில்லை எனத் தெரியவந்துள்ளது. அவருக்கு மாதம் 20 ஆயிரம் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# தரம் - 5, உயர்தரப் பரீட்சைகள் நவம்பர் 14, 15 ஆம் திகதிகளில்!

புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப்பொதுதராதர உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதனடிப்படையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறுமென கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், கல்விப்பொதுதராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொலிஸ் மாதிபரின் அறிவு

நாட்டில் மீண்டும் இருண்ட ஆட்சி யுகம் கட்டவிழத் தொடங்கியிருக்கின்றது.

போரில் – பிணக்கில் – முரணிலையில் – முதலில் பலியாவது 'உண்மைதான்'. இதுதான் உலகெங்கும் கிடைக்கும் பட்டறிவு. இலங்கை மட்டும் அதற்கு என்ன விதிவிலக்கா?

இங்கு திரும்பவும் 2015இற்கு முந்திய இருண்ட ஆட்சி கட்டவிழ்கின்றது. அதற்கான முதல் சமிக்ஞை உண்மைகளை வெளிப்படுத்தும் ஊடகங்கள் மீதான அத்துமீறல்.

இப்போதும் அந்த அத்துமீறலை ஆட்சிப் பீடத்தின் எடுபிடி அமைப்புப் போல – ஏவல் நாய்கள் மாதிரி – செயற்படுகின்ற பொலிஸ்துறையே ஆரம்பித்திருக்கின்றது.

அண்மைக் காலத்தில் ஊடகவியலாளர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு, அவர்களின் ஊடகத்துறை செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் மற்றும் தனிப்பட்ட விவரங்களை வழங்குமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இந்த அழுத்தங்கள் தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம், ஊடகத் தொழிலாளர் தொழிற்சங்கச் சம்மேளனம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், முஸ்லிம் மீடியா போரம், இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம், தமிழ் ஊடக ஒன்றியம் ஆகிய ஆறு அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு மூலம் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்தினவுக்குக் கடிதம் ஒன்றை விவரமாக அனுப்பி வைத்துள்ளன.

யாழ் ஊடக அமையமும் இது தொடர்பில் விரிவான – விளக்கமான – அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (அது இப்பக்கத்தில் தனியாகப் பிரசுரமாகியுள்ளது.)

ஊடக சுதந்திர முடக்கத்தின் ஒரு வடிவமே இத்தகைய அடக்குமுறை நடவடிக்கை என யாழ் ஊடக அமையம் சுட்டிக்காட்டியிருப்பது முழு உண்மை.

பொதுவாக இத்தகைய ஊடக சுதந்திர மீறல்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றில் அரசின் ஏதோ ஓர் அங்கம் தவறிழைக்கும். கட்டளைச் சங்கிலி ஒழுங்கில் (Chain of Commant) மேலிருக்கும் அதிகாரிகள் மீதும் வெறுமனே குற்றம் சுமத்தப்படும் என்ற கருத்து நிலைப்பாடு உள்ளது.

ஆனால், இப்போதைய விடயத்தில் – தன் சொந்த அனுபவத்தில் – இப்போது ஊடகங்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தம் தொடர்பில் ஆட்சிப்பீடம் என்ன செய்கின்றது, என்ன வழிப்படுத்தல்களை வழங்குகின்றது, என்ன அழுத்தத்தைக் கொடுக்கின்றது என்பதற்கு அப்பால், இந்த நிலைமைக்கு பொலிஸ் மா அதிபரே – அவரின் அலுவலகமே – காரணம் என்று தெட்டத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் இப்பத்தி ஊடாக எழுத்தில் பதிவு செய்ய விரும்புகின்றது காலைக்கதிர்.

ஏதோ ஒரு பொலிஸ் நிலையத்தில் இழைக்கப்படும் தவறு அல்ல இது. பொலிஸ் மா அதிபரும், அவரது அலுவலகமும் மெத்தப்படித்த சட்டவியலாளர்களுடன் இயங்கும் ஒரு கட்டமைப்பு. பொலிஸ் மா அதிபரின் – பொலிஸ் துறையின் – பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் றோஹண கூட ஒரு மூத்த சட்டவாளர்தான்.

ஊடகங்களைக் கையாளும் விடயத்தில் பொலிஸ் மா அதிபரின் அலுவலகம் அடிப்படைச் சட்ட அறிவு கூட இல்லாமல் இயங்குவதுதான் இந்தப் பிரச்சினைகளுக்குப் பிரதான காரணம்.

உள்ளூரில் அரச மட்ட நிர்வாகத்தில் நடைபெறும் ஊழல்கள் தொடர்பில் ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. சம்பந்தப்பட்ட – அல்லது தாம் பாதிக்கப்படுகின்றோம் கருதுகின்ற – அரச அலுவலகர் ஒருவர் அது பற்றி பொலிஸ் மா அதிபருக்கு ஒரு முறையீட்டுக் கடிதத்தை அனுப்புகின்றார். அது என்ன முறையீடு, அதில் சட்ட ரீதியாகத் தலையிடுவதற்கு தங்களுக்கு அதிகாரம், முகாந்திரம் இருக்கின்றனவா என்பவற்றை எல்லாம் பார்க்காமல் அந்த முறையீடு தொடர்பில் விசாரித்து அறிக்கை அனுப்பும்படி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்துக்குக் கடிதம் அனுப்பும்.

பிறகென்ன? பொலிஸ் மா அதிபரிடம் இருந்து வந்த கடிதத்தை வைத்துக் கொண்டு சம்பந்தப்பட்ட செய்தியாளரைப் பொலிஸ் நிலையத்துக்கு வா, வா என்று பொலிஸார் தொல்லை தருவர். இல்லையேல் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்று நீதிமன்றம் மூலம் பிடியாணை பெற்றுக் கைது செய்வோம் என்றும் மிரட்டுவார்கள்.

இனி, செய்தியாளர்கள் பொலிஸ் நிலையத்திற்கு நேரில் சென்று, குற்றவியல் மானநஷ்ட சட்டம் இலங்கையில் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே முன்னைய ரணிலின் அரசினால் ரத்துச் செய்யப்பட்டு விட்டது, இந்த விடயத்துக்காக எங்களிடம் நீங்கள் கேள்வி கேட்கவும் முடியாது, நாம் பதில் சொல்லவும் தேவையும் இல்லை, உங்களிடம் முறைப்பட்டவர் தேவையானால் சிவில் வழக்கு நடவடிக்கை மூலம் நிவாரணம் தேடட்டும் என்று குட்டி லெக்ஸர் அடித்து, வாக்குமூலம் அளிக்க வேண்டியிருக்கின்றது.

இதுதான் இப்போது பல பொலிஸ் நிலையங்களில் ஊடகவியலாளருக்கு எதிராகக் கட்டவிழும் சின்னத்தனத்தின் விவரம். எல்லாவற்றுக்கும் காரணம் சட்ட அறிவேயற்ற பொலிஸ் மா அதிபர் அலுவலகம்தான்....!

# முறையற்ற விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையங்களுக்கு ஊடகவியலாளர்களை அழைப்பது ஊடக சுதந்திர முடக்கமே!

## யாழ்.ஊடக அமையம் காட்டத்துடன் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 19

ஊடகவியலாளர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு முறையற்ற விசாரணைகளுக்காக வரவழைக்கப்பட்டு அவர்களின் ஊடக நடவடிக்கைகள் மற்றும் தகவல் மூலங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றமை ஊடக சுதந்திர முடக்கத்தின் ஒருவடிவமே என யாழ். ஊடக அமையம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஊடக அடக்குமுறைகள் அதிகரித்து வரும் நிலையில் யாழ். ஊடக அமையத்தால் நேற்று அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையை ஊடக அமையத்தில், ஊடக அமைய இணைப்பாளர் கு.செல்வக்குமார் வாசித்து வெளியிட்டார்,

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கையின் ஊடகப்பரப்பில் கூடிய நெருக்கடிகளையும் மரணங்களையும் கடந்த தசாப்த காலத்தில் எதிர்கொண்ட தரப்பாகத் தமிழ் ஊடகத்தரப்பே இருந்துவந்துள்ளது.

ஆனாலும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்காத அரசாக இலங்கை இருந்து வருகின்ற நிலையில், மீண்டும் தலைதூக்கி வருகின்ற ஊடக சுதந்திரத்துக்கெதிரான அச்சுறுத்தல்கள் ஊடகவியலாளர்களது எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கி வருகின்றது.

2000 ஆம் ஆண்டில் பி.பி.சி. ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழ் ஊடகப்பரப்பின் மீதான ஊடகப்படுகொலை கலாசாரம் 39 இற் கும் அதிகமான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களைக் காவு கொண்டு நிற்கின்றது.

அதேவேளை நூற்றுக்கணக்கிலான ஊடகவியலாளர்கள் ஊடகப்பணியிலிருந்து விலகவும் நாட்டை விட்டு வெளியேறவும் இத்தகைய சூழலே காரணமாகியிருந்தது.

ஆனாலும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான ஒரு குற்றத்துக்கு கூட நீதி வழங்கப்படாத – மறுக்கப்பட்ட – வரலாற்றை இலங்கை இன்று வரை கொண்டுள்ளது. நாட்டின் வரலாற்றில், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ஒரு சிலவே. அவற்றில் கிடப்பில் போடப்பட்டுள்ள தர்மரத்னம் சிவராம் கொலை தொடர்பான வழக்கும் ஒன்றாகும்.

நிமலராஜன் கொலை தொடர்பிலான வழக்கும் கடந்த மாதத்துடன் ஒரேயடியாக இழுத்து மூடப்பட்டுள்ளது. நடந்தேறிய ஊடகப் படுகொலைகள் உள்ளிட்ட ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக சர்வதேச ஊடக அமைப்புக்கள் முன்னிலையிலான விசாரணை என்பது முக்கிய கோரிக்கையாக யாழ்.ஊடக அமையத்தால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் மீண்டும் மோசமடைந்துவரும் ஊடக சுதந்திரம் அச்சத்தை தருகின்றது. தமிழர் தாயகத்திலிருந்து வெளிவரும் பௌத்தமயமாக்கல், ஆக்கிரமிப்புக்கள், இராணுவமயமாக்கல், மனித உரிமை மீறல்கள், காரணமற்ற கைதுகள், ஊழல் மோசடிகள் மற்றும் சுற்றுச்சூழல் அழிப்பு உள்ளிட்டவை தொடர்பிலான செய்திகள் வெளியே வருவதை முடக்க மீண்டும் முனைப்பு காட்டப்பட்டுவருகின்றன.

முறைசாரா விசாரணைகளுக்காக ஊடகவியலாளர்கள் காவல் நிலையங்களுக்கு வரவழைக்கப்பட்டுஅவர்களின்ஊடகநடவடிக்கைகள் மற்றும் தகவல் மூலங்கள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றமை ஊடக சுதந்திர முடக்கத்தின் ஒரு வடிவமே.

அரச அதிகாரத்தின் வெவ்வேறு வடிவங்களும் இத்தகைய அச்சமூட்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. அவ்வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கைது, காரணம் தெரிவிக்கப்படாது சிறை, நாலாம் மாடி விசாரணை மற்றும் இரகசிய விசாரணையென அச்சுறுத்துவதன் ஊடாக ஊடகவியலாளர்களை முடக்க மீண்டும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

முன்னதாக சமூக ஊடக பதிவுகளுக்காகக் கைதானவர்கள் பிணையின்றி சிறைகளில் அடைக்கப்பட்டிருக்க மரணதண்டனை கைதிகள் பொதுமன்னிப்பில் வீடு திரும்பும் கதைகள் இலங்கையில் சாதாரணமாகியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் செல்வகுமார் நிலாந்தன், மட்டக்களப்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவுக்கு வரவழைக்கப்பட்டு. ஏறக்குறைய மூன்று மணி நேரம் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது மின்னஞ்சல் முகவரி மற்றும் பேஸ்புக் கடவுச்சொல், வட்ஸ் அப் எண் மற்றும் அவரது வங்கிக் கணக்கு எண்ணைக் கூட வழங்குமாறு அழுத்தம் கொடுத்தனர் எனக் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

மட்டக்களப்பு பத்திரிகையாளர் புண்ணியமூர்த்தி சசிதரன் பல சந்தர்ப்பங்களில் விசாரணைக்கு காவல் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கிளிநொச்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவரும் தனது முகநூல் பதிவிற்காக நாலாம் மாடிக்கு அழைக்கப்பட்டிருந்தமையுடன் அச்சுறுத்தி அவரது இரகசிய கடவுச்சொற்கள் பறிக்கப்பட்டிருந்தன. உண்மையில் ஊடகவியலாளர்களது தனிப்பட்ட தகவல் தொடர்பு கடவுச்சொற்களைப் பெற்ற பிறகு, அவரது தகவல் தொடர்பு தனியுரிமை ரத்து செய்யப்படலாம், வேறு எவரும் ஏதேனும் மாற்றங்கள் அல்லது உள்ளீடுகளைச் செய்யலாம் என்பதை இலகுவாக எடுத்துக் கொள்ளமுடியாது.

இதேபோன்று கிளிநொச்சியைச் சேர்ந்த ஊடகவியலாளர் முருகையா தமிழ் செல்வன் வடமாகாணசபையின் சுகாதாரத்துறை ஊழல்களை வெளிப்படுத்தியமைக்காக விசாரணைகளை எதிர்கொண்டுள்ளார். தகவல் மூலத்தை வெளிப்படுத்தக் கோரி காவல்துறை அத்தியட்சகர் மட்டத்தில் அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன.

இதேஊழல்பற்றிகட்டுரையொன்றைவரைந்த 'காலைக்கதிர்' ஊடகவியலாளர் ந.லோகதயாளன் அதே பாணியில் தொடர்விசாரணைகளை எதிர்கொள்கின்றார். காவல் நிலையத்திற்கு தொடர்விசாரணைகளிற்கு அழைப்பதன் மூலம் அவர்களது ஊடகப்பணியை அச்சமூட்டும் முயற்சிகள் தொடர்கின்றன.

ஊழலற்ற ஆட்சியமைப்பேன் என கதிரையேறிய தற்போதைய ஜனாதிபதியின் நேரடிப் பிரதியான வடக்கு ஆளுநர் வடமாகாண ஊழல்களைக் கண்டுகொள்ளாது வேடிக்கை பார்த்திருக்கிறார். அதிகார மட்டமோ தம்மை காப்பாற்ற ஊழல்களை வெளிப்படுத்திய ஊடகவியலாளர்களைப் பலியாடாக்கப் பார்க்கின்றது.

உள்ளூரில் அரச மட்ட நிர்வாகத்தில் நடைபெறும் மோசடிகளைக் கூட வெளிக்கொணர்வதை அனுமதிக்காத சூழலில் ஊழலற்ற ஆட்சியமைப்பேன் என்பது வெறும் பேச்சாகவே இருந்துவிடப்போகின்றது.

இதேவேளை பளையைச் சேர்ந்த இரு ஊடக வியலாளர்கள் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர். ஓர் ஊடகவியலாளனது சிறுவயது மகன் சட்டவிரோத மண் கடத்தல்காரர்களால் தாக்கப்பட்டுள்ளான்.

அதேவேளை மற்றொரு ஊடகவியலாளனை கைது செய்யக் கோரி தென்னிலங்கையில் மதகுரு ஒருவர் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளார்.

மறுபுறம் தேசிய அளவில் சிரச, சக்தி போன்ற ஊடகங்கள் அச்சமான சூழலை எதிர்கொள்ள, யாழ்ப்பாணத்தில் படங்களை செய்தி அறிக்கையிடலில் பயன்படுத்தியதற்காக நாளிதழ்கள் காவல் நிலையங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் அலைய வேண்டியேற்படுகின்றது.

மறுபுறம் சுற்றுச்சூழலை பாதுகாக்க குரல் கொடுத்த முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு இன்று வரை நீதி கிட்டவில்லை.

அம்பாறை முதல் யாழ்ப்பாணம் ஈறாக ஊடகவியலாளர்களது பணி நாள் தோறும் கேள்விக்குள்ளாகியே வருகின்றது. தமது அன்றாட செய்தி அறிக்கையிடலிற்காக ஊடகவியலாளர்கள் போராட வேண்டியேற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் ஊடக சுதந்திரம் கேள்விக்குள்ளான போது வேடிக்கை பார்த்திருந்த தெற்கும் அதன் வலிகளை தற்போது உணரத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பரிமாணத்தில் கட்டவிழ்த்துவிடப்படும் ஊடக அடக்குமுறைகள் மீண்டுமொரு இருண்ட யுகத்தை நோக்கி நாடு செல்கின்றதா என்ற கேள்வியை எழுப்பி நிற்கின்றது.

அரங்கேற்றப்பட்ட ஊடகப்படுகொலைகளுக்கான நீதி கிட்டாதவரையில், குற்றவாளிகள் தண்டிக்கப்படாத வரையில் அதிசயங்கள் ஏதும் நடந்துவிடுமென்ற நம்பிக்கை எவருக்குமேயில்லை.

மீண்டும் வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி நிற்கின்ற அதேவேளை ஊடகவியலாளர்களது பாதுகாப்பு மற்றும் சுயாதீனமான பணிக்காக அனைவரையும் குரல் கொடுக்க யாழ்.ஊடக அமையம் வேண்டி நிற்கின்றது. – என குறிப்பிடப்பட்டுள்ளது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 19

என் ஊடகத்துறை அனுபவத்தில் நான்கு பேரிடம் குறிப்பிடத்தக்க முரணிலை உபதேசங்களை – ஆலோசனைகளை – பெற்றேன் என்று நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன்.

அதில் முதலாவது எஸ்.டி.எஸ். ஐயாவினுடையது என்று குறிப்பிட்டு அது பற்றிய விடயங்களை விவரித்தேன். மற்றைய மூன்று குறித்தும் சுருக்கமாகக் குறிப்பிடுவேன் என்றும் தெரிவித்திருந்தேன்.


கொழும்புக்கு வருகை தந்த திருமுருக கிருபானந்தவாரியாரோடு சிவநாயகம் ஐயா தம்பதியர்.

அந்த ஆலோசனைகளை அவ்வப்போது தந்தவர்களுள் ஒருவர் மதியுரைஞர் பாலசிங்கம்.

அவர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர். தலைவர் பிரபாகரனுடன் மிக நெருக்கமாகப் பழகியவர். அதே நெருக்கத்துடனும் புரிந்துணர்வுடனும் பாலா அண்ணனுடனும் அவர் துணைவியார் அடேல் அன்ரியுடனும் ஊடாடும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது. பாலா அண்ணனின் இறுதிக் காலத்தில் அவருடன் தங்கியிருந்து பல விடயங்களைக் கேட்டு, அறிந்து, விவாதித்து, கிரகித்து புரிந்து கொள்ளவும் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. அவை இந்தக் கட்டுரைத் தொடருக்குத் தொடர்பற்றவை. அதனால் அவற்றைப் பற்றி இங்கு விரிக்காமல் விட்டுவிடுகிறேன்.

பாலா, அண்ணன் முழு நேரமாக விடுதலைப் புலிகளுக்காகப் பணியாற்றிய காலத்திலும் சரி, பின்னர் தம் பணியிலிருந்து ஒதுங்கி – அல்லது ஒதுக்கப்பட்டு – இருந்த காலத்திலும் சரி, ஒரு விடயத்தை திரும்பத் திரும்பக் கூறுவார்.

*“உன்னுடைய பத்திரிகை புலிகளுடைய பத்திரிகை அல்ல. சுதந்திரமான – சுயாதீனமான – பத்திரிகை. அதை வாசிப்பவர்களுக்கு அத்தகைய சுயாதீனம் உணரப்படக் கூடியதாக இருக்க வேண்டும். இந்தப் போராட்டம் தமிழர்களுடையதுதான். ஆனால் அதற்காக ‘எங்கள் போராட்டம்’ என்று நீ எழுதப் புறப்பட்டால் நீயும் உன் பத்திரிகையும் புலிகளாக அடையாளப்படுத்தப்பட நேரிடும்.*

*அதனால் உனக்கும் நன்மை இல்லை. உன் பத்திரிகைக்கும் நன்மை இல்லை. தமிழ் மக்களுக்கும் நன்மை இல்லை. புலிகளுக்கும் கூட நன்மை இல்லை.*

*“நீயும், உன் பத்திரிகையும் வேறு; புலிகள் வேறு. இதை மனதில் இருத்தி, வெளிப்பட்டு நின்று செய்திகளை, கட்டுரைகளை, ஆசிரிய தலையங்கங்களை எழுது. அப்போதுதான் நீயும் உன் பத்திரிகையும் மக்கள் மனதில் – தமிழ் மக்கள் மனதில் – உலகின் கணக்கில் – வெல்ல முடியும்”* என்று திரும்பத் திரும்பச் சொல்வார். அவை மீறப்பட்டன எனக் கருதப்படும் இடங்களைக் குறித்து வைத்து அடுத்த நாள் நேரில் சுட்டிக்காட்டுவார்.


மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் அவரின் லண்டன் நியூமோடன் இல்லத்தில் அவர் காலமாவதற்கு முதல் வாரம் எடுத்த படம். இதுவே பாலா அண்ணன் உயிருடன் இருந்த போது எடுத்த கடைசிப் படமும் கூட.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞராக இருந்து கொண்டு, அதில் இருந்து வேறுபட்டு நிற்கும்படி, அந்தப் போராட்டத்துடன் சமாந்திரமாகப் பயணித்த ஒரு பத்திரிகையாளனுக்கு மதியுரைஞர் பாலசிங்கம் ஆலோசனை கூறுவது ஒரு முரணிலை உபதேசம்தானே!

அடுத்தவர் தலைவர் பிரபாகரன்.

2002 ஜனவரி மாதம். அப்போதைய ரணிலின் அரசும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்ய முன்னர், வடக்குக் களநிலைமை குறித்து அறிய விரும்பிய விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் என்னை வன்னிக்கு அழைத்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் ‘உதயன்’ ஆசிரியராக இருந்த நான் விமானத்தில் கொழும்புக்குப் போய், வாகனம் மூலம், உயிலங்குளம் பாதை ஊடாக இராணுவச் சோதனைச் சாவடிகளைத் தாண்டி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்குச் சென்றேன். புதுக்குடியிருப்பில் தலைவர் பிரபாகரனுடனும் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனுடனும் இரவு நேர விருந்துடன் கலந்துரையாடினேன்.

சுமார் நான்கு மணி நேரக் கலந்துரையாடல். பல விடயங்கள் குறித்துப் பேசினோம். அவை எல்லாம் நினைவில் உண்டு.

1996 இல் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் புலிகள் படையினரிடம் இழந்த பின்னர், நான் தலைவர் பிரபாகரனை ஆறு, ஏழு வருடங்கள் கழித்துச் சந்திக்கிறேன்.

இதற்கு இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு டிவிஷனுக்குக் கட்டளைத் தளபதியாக வந்த ஜெனரல் லயனல் பலகல்லவுடன் ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் நான் நெருங்கி ஊடாடினேன்.

பின்னர் அவர் யாழ் கட்டளைத் தளபதியாகவும், இராணுவத் தளபதியாகவும் உயர்ந்தார். ஓர் இராணுவ அதிகாரி – பத்திரிகையாளர் என்ற முறையில் எங்கள் நட்பும் ஊடாட்டமும் நீடித்தன. நட்பு எத்தகையதாக இருந்தாலும் என் செய்தி நிலைப்பாட்டில் நான் அவரிடம் எந்தக் கட்டத்திலும் சமரசம் செய்தவன் அல்லன். ஆனாலும் எங்கள் இருவரிடையேயும் மனித நேய அடிப்படையிலான புரிந்துணர்வு இருந்தது.

அந்தச் சமயத்தில்தான் தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பின் போது எங்கள் பேச்சு இராணுவத் தளபதி பக்கம் திரும்பியது. தலைவர் பிரபாகரன் ஒரு விடயத்தைச் சொன்னார். ஆங்கிலச் சொல்லாடல் அதில் இருந்தது.

*“உங்கள் நண்பர். இராணுவத் தளபதி பலகல்ல ஒரு warrior (போர் வீரர்) அல்லர். அதையும் தாண்டி அவர் ஒரு intelligence ஆள். கவனம். உங்களுக்குள்ளும் புலனாய்வு ஆள்களை வைத்திருப்பார்.”* என்றார் தலைவர் பிரபாகரன்.

அவரது சொல்லாடலில் ‘உங்கள் நண்பர் இராணுவத் தளபதி பலகல்ல’ என்பதில் ‘உங்கள் நண்பர்’ என்ற சொல் கொஞ்சம் அழுத்தலாகக் கூறிய மாதிரி – உயர்வு நவிழ்ச்சி போன்று – எனக்குத் தோன்றியது.

அதனால் திடுக்குற்ற நான், எனக்கும் இராணுவத் தளபதிக்கும் உள்ள ஊடாட்டம் குறித்து ஒரு விளக்கம் அளிக்க முற்பட்டேன்.

‘எங்கள் நட்புறவு வெளிப்படையானது...” என்று நான் பேசமுற்பட்டபோதே தலைவர் பிரபாகரன் வழி மறித்தார்.


தலைவர் பிரபாகரன் மற்றும் தமிழ்ச் செல்வனோடு அந்த இரவு விருந்து

“இல்லை. உங்களுக்கும் இராணுவத் தளபதிக்கும் இடையிலான நட்புறவு எமக்கு நன்கு தெரியும். நீங்கள் லண்டனில் பாலா அண்ணனுக்கு இது குறித்துச் சொல்லும் தகவல்கள் தவறாது எனக்கும் தெரிவிக்கப்படுகின்றன. நான் அவற்றை அறிவேன். யுத்தத்தின் மத்தியில் பத்திரிகை நடத்தும் நீங்கள் எல்லோரோடும் தொடர்பாடல் வைத்திருப்பது அவசியம். சந்திரிகாவுடனும் அதனைப் பேணுங்கள். இராணுவத் தளபதியுடனும் நன்கு தொடர்ந்து பழகுங்கள். ஆனால் அவதானமாக இருங்கள். அவர் புலனாய்வு ஆள். கவனமாகப் பழகுங்கள். உங்கள் அந்த நட்புறவு எங்களுக்கும் உதவும்” என்று கூறிய தலைவர் பிரபாகரன் பிரதமர் ரணிலுடன் நடக்கும் சமாதான முயற்சிகள் குறித்தும், தனது செய்தியாக சில தகவல்களை இராணுவத் தளபதி பலகல்லவிடம் கூறும்படி வேண்டினார். நான் கொழும்பு திரும்பியதும் இராணுவத் தளபதியைச் சந்தித்து அந்தத் தகவல்களைத் தெரியப்படுத்தினேன்.

விடுதலைப் புலிகளின் தலைவராக இருந்து, அரசுப் படைகளுடன் உக்கிரமான போரை நடத்திக் கொண்டிருந்த தலைவர் பிரபாகரன், அச்சமயத்தில் இராணுவத் தளபதியாக இருந்த ஒருவருடன் நெருங்கி நட்புறவுடன் பழகுங்கள், அதைத் துண்டிக்க வேண்டாம் என்ற ரீதியில் பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு ஆலோசனை கூறியமை முரணிலை உபதேசம்தானே....?

அதேபோன்ற ஒரு முரணிலை ஆலோசனையை இராணுவத் தளபதி பலகல்ல கூட எனக்குத் தந்தார். அதை நாளை பார்ப்போம்.

அதற்கிடையில் ஒரு சின்னச் சம்பவம் பற்றிய ஒரு நினைவு கூரல். ஓர் ஆசிரியரின் கண்ணும், காதும், உணர்வும் எவ்வளவு பரந்தவை, விரிந்தவை, துல்லியமானவை என்பதற்கு இது உதாரணம். ஆசிரிய பீடத்தை எத்தகைய கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பதற்கும்தான்.

‘தினபதி’ அலுவலகத்தில் வயதில் குறைந்த பணியாளர் நான்தான். விளையாட்டுப் பிள்ளை, துடுக்குத்தனமான பேச்சுகளில் நான் ஊறியிருந்த காலம்.

ஆசிரியர் சிவநாயகம் மதியம் அளவில்தான் அலுவலகத்துக்கு வருவார். முழுக்கை சேர்ட், டிரவுசர், சப்பாத்துடன், டை கட்டாத குறையாக ‘டிப் டொப்’ ஆகத்தான் அலுவலகத்துக்கு வருவார். என்னை விட சுமார் நாற்பது வயது மூத்த அவர் எங்களுக்குப் போட்டியாக உடையணிந்து வருகின்றார் என்ற குமைச்சல் என் மனதில் இருந்த காலம்.

அந்தக் காலத்தில் எங்கள் ஊரில் சந்தியில் நின்று வீறாப்புப் பேசுபவர்களை ‘கைவார்’ அடிப்பது என்று சொல்வார்கள்.

அன்று மதிய நேரம். லிப்ட் திறந்தது. பளிச்சென்று உடையில் ‘டிப் டொப்’பாக வெளிப்பட்ட சிவநாயகம் ஐயா, லிப்ட் பக்கத்தில் இருந்த நான்கு படிகளிலும் ஏறி, தனது கண்ணாடி அறையை நோக்கி தமது சிவாஜி கணேசன் பாணி நடையில் சென்று கொண்டிருந்தார். சுமார் இருபது, முப்பது மீற்றர் தொலைவில் செய்தியாளர்களுக்குரிய மேசைகளில் இருந்த எல்லோரினதும் கண்களும் லிப்ட் வாசல் பக்கம் திரும்பி அவரை நோக்கின.

அந்தத் திடீர் அவதானிப்பைக் குழப்பும் விதத்தில் நான் ஒரு ‘கொமண்ட்’ விட்டேன்.

*“ஆ... இந்தா கைவார் கந்தையா வந்திட்டார்...!”* என்றேன் நான்.

என் சீனியர் ரிப்போட்டர்கள் உட்பட எல்லோரும் என் கொமண்டுக்கு சிரித்து வைத்தார்கள். அத்துடன் அந்த விடயத்தை நான் மறந்து விட்டேன்.

அடுத்த நாள் அலுவலகத்துக்குள் நடமாடிய என்னை தமது கண்ணாடி அறைக்குள் இருந்து கைகாட்டி அழைத்தார் ஆசிரியர். நான் விரைந்து சென்றேன்.

சிரிப்பு முகத்தில் இருந்த அவர், அறைக்குள் நின்று கொண்டிருந்த என்னைப் பார்த்தபடி புன்னகை மாறாமல் *“அது என்ன அர்த்தம் ‘கைவார்’ என்றால்...?”* என்று கேட்டார். நான் அதிர்ந்து போனேன். ஏதோ சமாளிப்புச் சொல்லி, விளக்கம் கூறித் தப்பி வந்து விட்டேன்.

அவருக்கு என் மீது கோபமோ, சீற்றமோ ஏற்படவில்லை. ‘கைவார்’ என்ற சொல்லுப் புதியது போலவும், அதற்குத் தாம் விளக்கம் கேட்பவர் மாதிரியும் நாகரிகமாக வினாத் தொடுத்து ஒரு விடயத்தை எனக்குக் குறிப்பால் உணர்த்தினார்.

என் ஆசிரியபீடம் என் முழுக் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. இங்கு எல்லா இடத்திலும் என் கண்கள், காதுகள், நாசிகள், உணர்வுகள் பரந்துள்ளன. அதற்கு நீங்கள் தப்ப முடியாது என்பதுதான் அந்தச் செய்தி.

‘தினபதி, ‘சிந்தாமணி’ அலுவலகத்தில் பக்கங்களில் சேர்ப்பதற்கான ஒவ்வொரு செய்தியையும் உதவி ஆசிரியர்கள் அங்கீகரித்து அனுப்பும் போது, அந்தச் செய்தி சிவநாயகம் ஐயாவின் கண்ணாடி ஊடாக அவருக்கு எப்படித் தென்படுமோ, எந்தக் கோணத்தில் பார்க்கப்படுமோ, அப்படித்தான் ஒவ்வொரு உதவி ஆசிரியர்களின் அவதானத்திலும் அதுபடும். அப்படி ஒருமுக சிந்தனையை – பார்வையை – தமது ஆசிரிய பீட அணியில் ஸ்திரமாக ஏற்படுத்தி வைத்திருந்தார் அவர்.

இன்று எத்தனை பத்திரிகை ஆசிரியர்கள் அப்படியான ஓர் ஆசிரிய பீடத்தை வைத்திருக்கின்றார்கள்?

கொழும்பில் எனக்குத் தெரிந்த ஒரு பத்திரிகை ஆசிரியர் இருந்தார். அவரது பணியும் கத்தியில் நடப்பது போல இருந்தது. அவர் சட்டக் கல்லூரியில் எனக்கு ஒரு விரிவுரையாளரும் கூட.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 8 | கணிதம் | அலகு 15

## தசமங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

**6. தசம எண் ஒன்றினை தசம எண்ணால் பெருக்கல்**

**உதாரணம் :**

**முறை 1**

$0.2 \times 0.7 = \frac{2}{10} \times \frac{7}{10} = \frac{14}{100} = 0.14$

**முறை 2**

0.7 இன் தசம தானங்களைக் கருதாது 2 x 7 = 14 பெருக்க வேண்டும். 0.7, 0.2இல் இரு தசமதானம் இருப்பதால் விடையிலும் இரு தசமதானப் புள்ளி இருக்குமாறு தசமப்புள்ளியை இடவேண்டும்.

$0.2 \times 0.7 = 0.14$

1) 1.52 × 2.2 = ...........................
2) 15.2 × 5.1 = ...........................
3) 1.52 × 3.2 = ...........................
4) 2.52 × 7.6 = ...........................
5) 1.2 × 5.7 = ...........................
6) 2.5 × 6.3 = ...........................
7) 135.2 × 8.1 = ...........................
8) 115.2 × 4.3 = ...........................
9) 3.52 × 0.12 = ...........................
10) 4.252 × 7.2 = ...........................
11) 7.512 × 2.4 = ...........................
12) 71.2 × 8.9 = ...........................
13) 19.52 × 4.6 = ...........................
14) 125.1 × 5.6= ...........................
15) 5.184 × 2.7= ...........................
16) 1.52 × 1.1 = ...........................
17) 15.2 × 1.5 = ...........................
18) 0.152 × 1.2 = ...........................
19) 24.32 × 3.5 = ...........................
20) 72.11 × 3.2 = ...........................
21) 15.20 × 3.4 = ...........................
22) 1.252 × 2.4 = ...........................
23) 152.1 × 2.6= ...........................
24) 1.2 × 4.9 = ...........................
25) 15.22 × 4.3 = ...........................
26) 12.212 × 2.8 = ...........................
27) 15.2 × 3.2 = ...........................
28) 1.5 × 1.4 = ...........................
29) 7.21 × 2.6 = ...........................
30) 1.344 × 1.1 = ...........................

**7. முழு எண் ஒன்றினை தசம எண்ணால் வகுத்தல்**

வகுத்தியை 10 இன் வலுக்களால் பெருக்கி முழு எண்ணாக மாற்றுதல் பின்னர் பொதுவான முறையில் வகுத்தல்.

உதாரணம் -

$14 \div 0.7 = \frac{(14 \times 10)}{(0.7 \times 10)} = \frac{140}{7} = 20$

$121 \div 1.1 = \frac{(121 \times 10)}{(1.1 \times 10)} = \frac{1210}{11} = 110$

1) 15 ÷ 0.3 = ...........................
2) 12 ÷ 0.4 = ...........................
3) 17 ÷ 1.7 = ...........................
4) 25 ÷ 0.5 = ...........................
5) 14 ÷ 0.7 = ...........................
6) 55 ÷ 1.1 = ...........................
7) 13 ÷ 1.3 = ...........................
8) 112 ÷ 0.5= ...........................
9) 35 ÷ 0.7 = ...........................
10) 144 ÷ 7.2 = ...........................
11) 75 ÷ 1.5 = ...........................
12) 72 ÷ 3.6 = ...........................
13) 12 ÷ 0.2 = ...........................
14) 81 ÷ 0.9 = ...........................
15) 584 ÷ 0.5= ...........................
16) 121 ÷ 1.1 = ...........................
17) 152 ÷ 0.5 = ...........................
18) 144 ÷ 1.2 = ...........................
19) 242 ÷ 0.2 = ...........................
20) 111 ÷ 0.1 = ...........................
21) 150 ÷ 0.3 = ...........................
22) 122 ÷ 0.2 = ...........................
23) 169 ÷ 1.3 = ...........................
24) 324 ÷ 0.9 = ...........................
25) 522 ÷ 0.2 = ...........................
26) 121 ÷ 1.1 = ...........................
27) 625 ÷ 2.5 = ...........................
28) 125 ÷ 0.5 = ...........................
29) 720 ÷ 3.6 = ...........................
30) 144 ÷ 1.2 = ...........................

**8. தசம எண் ஒன்றை தசம எண்ணால் வகுத்தல்**

உதாரணம்

(வகுத்தியை 10 இன் வலுக்களால் பெருக்கி முழு எண்ணாக மாற்றுதல் பின்னர் பொதுவான முறையில் வகுத்தல்)

$1.4 \div 0.7 = \frac{(1.4 \times 10)}{(0.7 \times 10)} = \frac{14}{7} = 2$

$1.21 \div 1.1 = \frac{(1.21 \times 10)}{(1.1 \times 10)} = \frac{12.1}{11} = 1.1$

1) 1.5 ÷ 0.3 = ...........................
2) 1.2 ÷ 0.4 = ...........................
3) 1.7 ÷ 1.7 = ...........................
4) 2.5 ÷ 0.5 = ...........................
5) 1.4 ÷ 0.7 = ...........................
6) 5.5 ÷ 1.1 = ...........................
7) 1.3 ÷ 1.3 = ...........................
8) 11.5 ÷ 0.5= ...........................
9) 3.5 ÷ 0.7 = ...........................
10) 14.4 ÷ 7.2 = ...........................
11) 7.5 ÷ 1.5 = ...........................
12) 7.2 ÷ 3.6 = ...........................
13) 1.2 ÷ 0.2 = ...........................
14) 8.1 ÷ 0.9= ...........................
15) 5.4 ÷ 0.9= ...........................
16) 1.21 ÷ 1.1 = ...........................
17) 1.52 ÷ 0.5 = ...........................
18) 14.4 ÷ 1.2 = ...........................
19) 24.2 ÷ 0.2 = ...........................
20) 1.11 ÷ 0.1 = ...........................
21) 1.59 ÷ 0.3 = ...........................
22) 12.2 ÷ 0.2 = ...........................
23) 16.9 ÷ 1.3 = ...........................
24) 3.24 ÷ 0.9 = ...........................
25) 5.22 ÷ 0.2 = ...........................
26) 1.21 ÷ 1.1 = ...........................
27) 62.5 ÷ 2.5 = ...........................
28) 12.5 ÷ 0.5 = ...........................
29) 72.6 ÷ 3.6 = ...........................
30) 1.44 ÷ 1.2 = ...........................

**ஆக்கம் - தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை)**
**யா /செங்குந்த இந்துக் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம்**
**(ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா / தேசிய கல்வியியற் கல்லூரி**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 8 | கணிதம் | அலகு 15

## தசமங்கள் - விடைகள்

**1. பின்வரும் பின்னங்களை தசம எண்ணாக மாற்றி எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1) 0.2 | 2) 0.3 | 3) 0.5 |
| 4) 0.7 | 5) 1.1 | 6) 1.5 |
| 7) 2.5 | 8) 3.7 | 9) 8.4 |
| 10) 9.9 | 11) 0.9 | 12) 9.6 |
| 13) 7.9 | 14) 8.9 | 15) 8.3 |
| 16) 0.02 | 17) 0.04 | 18) 0.23 |
| 19) 0.67 | 20) 0.98 | 21) 0.78 |
| 22) 1.64 | 23) 1.32 | 24) 4.78 |
| 25) 9.99 | 26) 0.89 | 27) 1.29 |
| 28) 2.39 | 29) 4.79 | 30) 7.19 |
| 31) 0.007 | 32) 0.09 | 33) 0.126 |
| 34) 0.487 | 35) 0.645 | 36) 0.699 |
| 37) 0.723 | 38) 0.845 | 39) 0.955 |
| 40) 9.999 | 41) 0.249 | 42) 6.429 |
| 43) 0.914 | 44) 7.269 | 45) 1.029 |

**2. பகுதி எண் பத்தின் வலுக்களாக அமையாத பின்னங்களை தசம எண் களாக மாற்றுதல்.**

| | | |
|---|---|---|
| 1) 0.4 | 2) 1.5 | 3) 0.1 |
| 4) 1.4 | 5) 5.5 | 6) 0.66 |
| 7) 1.4 | 8) 2.5 | 9) 0.8 |
| 10) 4.5 | 11) 1.8 | 12) 3.2 |
| 13) 1.1 | 14) 0.9 | 15) 2.1 |
| 16) 0.08 | 17) 0.2 | 18) 0.46 |
| 19) 2.68 | 20) 1.96 | 21) 3.90 |
| 22) 3.28 | 23) 5.28 | 24) 3.12 |
| 25) 19.84 | 26) 0.89 | 27) 7.35 |
| 28) 6.78 | 29) 0.94 | 30) 0.76 |
| 31) 0.014 | 32) 0.72 | 33) 0.016 |
| 34) 0.974 | 35) 0.192 | 36) 0.138 |
| 37) 0.184 | 38) 0.09 | 39) 0.777 |
| 40) 9.672 | 41) 1.992 | 42) 9.06 |
| 43) 0.914 | 44) 0.208 | 45) 0.204 |

**3. கலப்பு எண்களை தசம எண்களாக மாற்றுவோம்**

| | | |
|---|---|---|
| 1) 2.4 | 2) 4.5 | 3) 4.1 |
| 4) 4.4 | 5) 7.5 | 6) 1.4 |
| 7) 3.4 | 8) 5.5 | 9) 4.8 |
| 10) 7.5 | 11) 2.8 | 12) 3.2 |
| 13) 3.7 | 14) 2.9 | 15) 4.2 |
| 16) 1.08 | 17) 2.2 | 18) 3.46 |
| 19) 4.68 | 20) 5.96 | 21) 6.9 |
| 22) 4.28 | 23) 7.28 | 24) 1.07 |
| 25) 4.45 | 26) 2.32 | 27) 1.26 |
| 28) 1.39 | 29) 2.94 | 30) 2.76 |
| 31) 1.014 | 32) 3.72 | 33) 5.25 |
| 34) 2.974 | 35) 3.192 | 36) 1.138 |
| 37) 1.184 | 38) 3.09 | 39) 1.014 |
| 40) 3.024 | 41) 4.01 | 42) 1.046 |
| 43) 1.455 | 44) 3.208 | 45) 1.204 |

**4. தசம எண்களை பத்தின் வலுக்களால் பெருக்குதல்**

| | | |
|---|---|---|
| 1) 1520 | 2) 152 | 3) 15.2 |
| 4) 25.2 | 5) 12 | 6) 25 |
| 7) 1352 | 8) 1152 | 9) 35.2 |
| 10) 42.52 | 11) 751. 2 | 12) 7120 |
| 13) 1952 | 14) 12510 | 15) 518. 4 |
| 16) 152 | 17) 1520 | 18) 152 |
| 19) 2432 | 20) 7211 | 21) 15200 |
| 22) 1252 | 23) 152100 | 24) 1200 |
| 25) 15220 | 26) 12212 | 27) 151200 |
| 28) 1500 | 29) 7210 | 30) 1344 |

**5. முழு எண் ஒன்றை தசம எண்ணால் பெருக்குதல்**

| | | |
|---|---|---|
| 1) 3.04 | 2) 76 | 3) 4.56 |
| 4) 17.64 | 5) 6 | 6) 15 |
| 7) 1081.6 | 8) 460. 8 | 9) 31.68 |
| 10) 29.764 | 11) 15.024 | 12) 569.6 |
| 13) 78.08 | 14) 625.5 | 15) 10.368 |
| 16) 16.72 | 17) 228 | 18) 1.824 |
| 19) 729.6 | 20) 2307.52 | 21) 516.8 |
| 22) 30.048 | 23) 3954.6 | 24) 48 |
| 25)654.46 | 26) 341.936 | 27) 486.4 |
| 28) 21 | 29) 187.46 | 30) 14.784 |

**ஆக்கம் - தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை)**
**யா /செங்குந்த இந்துக் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் : திரு ஞானமணி இரத்தினசிங்கம்**
**(ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா / தேசிய கல்வியியற் கல்லூரி**

# தமிழ் இனத்தின் விடுதலைக்காக சிம்மக்குரலால் முழங்கிய சிவா

மன்னவன் க.இளங்கோ
(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதியில் தென்மராட்சி மணியகாறான முதலியார் வீரபாகு சிற்றம்பலம் அவர்களின் பேரனாகவும் சிற்றம்பலம் முதலியார் முருகேசு உடையாரின் மகனாகவும் கரவெட்டி மண்ணிலே 20.07.1923 ஆம் ஆண்டு பிறந்தார் சிவசிதம்பரம்.

அவர் தமது ஆரம்பக்கல்வியை அவரது பேரன் முதலியார் வீரபாகு சிற்றம்பலத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும், உயர் கல்வியை கொழும்பு சென் ஜோசப் கல்லூரியிலும் கற்றார். பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் போது இலங்கை கம்யூனிஸ் கட்சியின் தீவிர ஆதரவாளராகவே இருந்தார். பின்பு சட்டக்கல்லூரியில் கல்வி கற்று சட்டத்தரணியானார்.

1947 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பொன் கந்தையாவை ஆதரித்து பருத்தித்துறை தொகுதியில் பிரசாரம் செய்தார். 1956 ஆம் ஆண்டு பருத்தித்துறை தொகுதியில் பொன் கந்தையாவை எதிர்த்து சுயேச்சை வேட்பாளராக சிவசிதம்பரம் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். 1960 ஆம் ஆண்டு பருத்தித்துறை தொகுதி பருத்தித்துறை, உடுப்பிட்டி தொகுதிகளாக பிரிக்கப்பட்ட நிலையில் 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் உடுப்பிட்டித் தொகுதியில் சிவசிதம்பரம், பொன் கந்தையாவை எதிர்த்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1960 ஆம் ஆண்டு ஜூலைத் தேர்தலில் சிவசிதம்பரம் போட்டியிட்டார். சுகயீனம் காரணமாக பொன் கந்தையா போட்டியிடவில்லை. மீண்டும் சிவா வெற்றிபெற்றார். இத்தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பாக அவர் மட்டுமே தெரிவானார்.



இலங்கை அரசு தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காத நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இலங்கை அரசுக்கெதிரான சாத்வீகப் போராட்டத்தை 1961 ஆம் ஆண்டு பெப்ரவரி 20 ஆம் திகதி ஆரம்பித்து அரச இயந்திரத்தை முடக்கும் நிலையை ஏற்படுத்தியிருந்தனர். இப் போராட்டத்தில் கட்சி வேறுபாடு காட்டாது தமிழ் மக்களின் ஐக்கியத்துக்காக சிவாவுடன் இணைந்து கொண்டார். இரண்டு மாதங்கள் கடந்து விட்ட நிலையில், அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமிழ் மக்களுக்கான தனது பிறந்த நாள் பரிசாக ஏப்ரல் 17 ஆம் திகதி உரிமைக்காக போராடிய தமிழ்மக்களுக்கு எதிரான போராட்டத்தை நசுக்க அவசரகாலச் சட்டத்தை கொண்டு வந்து தமிழ்த் தலைவர்களைக் கைது செய்து கொழும்பு பனாகொடை முகாமிற்கு கொண்டு சென்று அடைத்தனர்.

யாழ் கச்சேரி முன்பாக நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டம் தளபதி அமிர்தலிங்கம், அவர் பாரியார் மங்கையற்கரசி, சிவா அவர்களோடு மக்கள் போராட்டத்தில் பங்குபற்றினர். திடீரென வந்த இனவழிப்பாளர் அமிர்தலிங்கத்தையும் அவர் மனைவியையும் கைது செய்தனர். அப்போது அங்கு கூடி இருந்த பெண்களையும் அவர்கள் தாக்க முற்பட்ட போதுதனைத் தடுக்க முற்பட்டார் சிவா. அப்போது இராணுவம் பலமாகத் தாக்கியதில் அவர் இறந்துவிட்டார் எனச் செய்தி காற்றில் பரவ வடமராட்சி மண் சோபை இழந்தது. காயப்பட்ட சிவாவை இளைஞர் குழு பாதுகாப்பாக கொண்டு சென்று காப்பாற்றினதை பின்பு அந்த மக்கள் ஆறுதல் அடைந்தனர்.

1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் சிவா தோல்வி கண்டார். 1972 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய முன்னணி உருவானது. 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் உடுப்பிட்டி சிவா அவர் நல்லூர் தொகுதியில் போட்டியிட்டு 28 ஆயிரத்து 137 அதிகூடிய மேலதிக வாக்குகளைப் பெற்று வரலாறு படைத்தார்.

2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்ட தமிழ் விடுதலைக் கூட்டணி 14 ஆசனங்களை பெற்றது. தேசியப்பட்டியல் மூலம் எம்.பியான சிவா நாடாளுமன்றத்துக்குச் சக்கர நற்காலியின் உதவியுடன் வருகை தந்து தனது சிம்மக்குரலைக் கொடுத்தவர். தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுத்த அவர், 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி அவர் நேசித்த மக்களையும் மண்ணையும் விட்டு ஆண்டவன் பாதம் சென்றடைந்தார்.

கடந்த நூறாண்டில் நாற்பது வருடங்கள் தமிழ்த் தேசியத்துக்காக வாழ்ந்த உத்தமரை அவரின் 98 ஆவது ஆண்டு பிறந்த நாளில் எம்மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்தும் தமிழ் தேசியத்துக்காக சிவாவின் பாதையினைத் தொடர்வோம்.

---

# தமிழர் ஒற்றுமைக்காக உழைத்த உடுப்பிட்டிச் சிங்கம் சிவசிதம்பரம்

## இன்று அவரது 98 வது பிறந்ததினம்

ஆ.ந.இராசேந்திரன்

உடுப்பிட்டிச் சிங்கம், சிம்மக்குரலோன் அமரர் சிவசிதம்பரம் ஐயா அவர்களின் 98 ஆவது பிறந்த தினமாகிய இன்று ஒரு பெரும் தமிழ்த் தலைவரைப் பற்றி நினைவு கூருவது சாலச் சிறந்ததென நம்புகிறேன்.

இலங்கை அரசியலில் தடம்பதித்த தலைவர்களில் மிகவும் சிறந்த அரசியல் பண்பும், உயர்ந்த மனிதத்துவ விழுமியங்களும் பொருந்திய தலைவர் சிவசிதம்பரம் ஐயா.

அமரர் சிவசிதம்பரம் கரவெட்டி மணியகாரர் பரம்பரையில் தோன்றினாலும் அவரது சிந்தனை மக்கள் நலன் சார்ந்ததாக இருந்தது. அதனால்தான் அவர் தனது பல்கலைக்கழகக் காலத்தில் கம்யூனிஸ்ட் தத்துவங்களின்பால் ஈடுபாடுடையவராகத் திகழ்ந்தார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் பல்கலைக்கழக நாள்களில் கம்யூனிஸ்டுகளாக விளங்கிய பலர் பிற்காலத்தில் சிறந்த அரசியல் தலைவர்களாக விளங்கியமை கண்கூடு. அந்த வழியில் அமரர் சிவசிதம்பரம் ஐயாவும் சிறந்த அரசியற் தலைவராக வாழ்ந்து மறைந்துள்ளார்.

அவரின் அரசியல் பிரவேசம் 1956 ஆம் ஆண்டு தேர்தலில் ஆரம்பமாகியது. இத்தேர்தலில் பருத்தித்துறை தொகுதியில் சுயேச்சையாக அவரது அரசியல் குரு கம்யூனிஸ்ட் கந்தையா அவர்களை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியடைந்தார். அதன் பின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து வடமராட்சியில் புதிதாகப் பிரித்து உருவாக்கப்பட்ட உடுப்பிடித் தொகுதியில் 1960 ஆம் ஆண்டு மார்ச்சிலும் பின் ஜூலையிலும் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின் 1965 ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் போட்டியிட்டு நாடாளு



மன்ற உறுப்பினரானார். 1967ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்தின் துணைச் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டு 1970 ஆம் ஆண்டு வரை அப்பதவியில் இருந்தார்.

தலைவர் சிவசிதம்பரம் தமிழர் பிரச்சினைகளில் அரசியலைக் கலக்காதவர். அதனாலேயே தான் மாற்றுக்கட்சியில் இருந்தபோதும் 1961 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்ட சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டார். சட்டமறுப்பு இயக்கத்தில் தபாற்காரராக யாழ். பொலிஸ் அத்தியட்சகருக்கே தபால் விநியோகம் செய்து தன்னைக் கைது செய்யுமாறு வேண்டினார். இச்சம்பவம் சிவசிதம்பரம் அரசியல் நடவடிக்கைகளில் பார்வையாளராக வன்றி பங்காளராக இருந்துள்ளார் என்பதற்கு சான்றாகும்.

சிவசிதம்பரம் 1970 ஆம் ஆண்டு தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஜெயக்கொடியிடம் தோற்றுப் போனார். இதேபோல் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தளபதி அமிர்தலிங்கமும் அவரை எதிர்த்து போட்டியிட்ட ஆ.தியாகராசாவிடம் தோற்றுப்போனார். இச் சம்பவங்கள் தொடர்ந்து அரசியலில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தக் காரணமாக இருந்தன. இந்தத் தோல்விக்குப் பின் தலைவர்கள் சிவசிதம்பரமும் அமிர்தலிங்கமும் தத்தமது கட்சிகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தார்கள். தென்னிலங்கையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் அமைந்த அரசு தமிழர் விரோத போக்கைக் கடைப்பிடித்தது. இந்த அரசியல் போக்கிலிருந்து தமிழர்களை காக்கவேண்டுமெனில் தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைய வேண்டும் என்று தமிழர்கள் உணர்ந்தனர். இதனடிப்படையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியும் திருகோணாமலையில் ஒன்றுகூடி தமி





ழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கின. சிவசிதம்பரம் அதன் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1976 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய முன்னணி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் உள்வாங்கி தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பரிணாமம் பெற்றது. வட்டுக்கோட்டையில் தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது பற்றிய துண்டுப்பிரசுரங்களை மற்றைய தலைவர்களுடன் இணைந்து விநியோகித்தார் சிவசிதம்பரம். ஆனால் அவரைக் கைது செய்த அரசாங்கம் ஏனோ தெரியவில்லை அவர் மீது நடவடிக்கை எடுக்காது விடுதலை செய்து விட்டது.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழரின் பலத்தை தென்னிலங்கைக்கும், வெளி உலகுக்கும் காட்ட வேண்டிய தேவையேற்பட்ட காலகட்டத்தில் ஒன்றிணைந்த இரண்டு கட்சிகளும் ஒற்றுமையாகப் போட்டியிடுவதற்கு தீர்மானித்தன. கட்சிகளுக்கு எத்தனை இடங்கள், எந்தெந்த இடங்கள் என்ற சர்ச்சை ஏற்பட்ட போது மிகவும் இலகுவாக ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் தொகுதிகள் பங்கிடப்பட்டன.

(மிகுதி நாளை....)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 71

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**220. பேச்சுவார்த்தைகளின் போது ஜூன், ஜூலை 2006இல் நடந்தவை என்ன?**

பல சம்பவங்கள். அதைத் தொடர்ந்து, 2007இல் மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்து, நேரடியான போருக்கு போய் 2009இல் புலிகளை அழித்தார். 12 வருடத்துக்கு முன்னைய சம்பவங்களானாலும் தமிழ் மக்கள் மனதில் என்றும் அவை நிழலாடும் என்பதால், அவற்றை விவரித்து அந்தக் கொடூரங்களையும் துன்பங்களையும் மீட்காமல் அதற்குள் கடந்து சென்ற முக்கியமான நிகழ்வுகளைத் தருகிறேன்.

மார்ச் 2003இல் இருந்து அரசாங்கத்துடன் நேரடி பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லை. அது விடுதலைப் புலிகள் வொஷிங்டன் கூட்டத்திற்கு அழைக்கப்படாததும், ஜப்பானுக்கு வர மறுத்ததிலிருந்தும் நிகழ்ந்தது.

அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்திற்கு ஒரு திட்டத்தை ஜூலை 2003இல் தர அதற்கு மறுதலிப்பாக விடுதலைப் புலிகள் தங்களது இடைக்கால அரசின் வடிவை 31 ஒக்டோபர் முன்வைத்தனர். அதனை தொடர்ந்து சந்திரிகா தேர்தலுக்கு போய் வெற்றிகொள்ள 26 டிசெம்பர் 2004இல் சுனாமி அழிவுகள் நிகழ்ந்தன. அதையொட்டி நிவாரணங்களுக்காக இடைக்கால நிர்வாகத்துக்கு P - Tom என்ற புரிந்துணர்வு கைசாத்திடப்பட அதை எதிர்த்து ஜே.வி.பியினர் நீதிமன்றுக்குப் போய், விசாரணை நடக்க மஹிந்த 17 நவம்பர் 2005இல் ஜனாதிபதியானார். தான் பிரதமராக இருந்த காலத்திலிருந்தே, இவர் நோர்வேயின் அனுசரணையில் நடந்து கொண்டிருந்த பேச்சுவார்த்தைகளை ஆதரிக்கவில்லை. ஜனாதிபதியானதும், 2002 இல்



அரச குழுவுக்குத் தலைமை தாங்கிய பாலித கொஹன்ன

ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் மீறாதவாறு காட்டிக் கொண்டு, விடுதலைப் புலிகளிலிருந்து பிரிந்த கருணாவையும் மற்றைய குழுக்களையும் பாவித்து விடுதலைப் புலிகளைத் தாக்கி நிர்முலப்படுத்தும் திட்டங்களில் ஈடுபட்டு, இவை தமிழ்க் குழுக்களிடையே நடக்கும் அவர்களின் பதவிப் போராட்டங்கள் என விவரித்தார்.

அத்தோடு பேச்சுவார்த்தைகளுக்கு வரும் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்புக்களை குறைத்து - முக்கியமாக வன்னியிலிருந்து கொழும்புக்கு வரும் ஹெலிக்கொப்டர்களை இடை நிறுத்தி, அவர்கள் ஏ9 பாதையால் வரலாம் எனப் பணித்தார். ஒட்டுக் குழுக்கள் ஆயுதம் தரித்து அந்த பாதைகளில் நடமாடுவதால் தாங்கள் வீதிகளால் கொழும்பு வர முடியாதென புலிகள் மறுத்தனர். கருணா மற்ற ஒட்டுக் குழுக்களின் தாக்குதல்களை - விடுதலைப் புலிகள் தம்முடையவை அல்ல என மறுதலித்த தாக்குதல்களை - புலிகளின் போர் நிறுத்த ஒப்பந்த மீறல்களாகப் பரப்புரை செய்தார்.

அதேசமயம் சர்வதேசத்தின் பல நிபுணர்களைப் பெரும் பொருள் செலவில் நியமித்து, பேச்சுவார்த்தைகளில் நோர்வே ஓரவஞ்சமாகச் செயற்படுகிறது என அறிக்கைகள் தர வைத்து அவை பிரபல பத்திரிகைகள் ஊடாக சர்வதேசத்தில் பரப்பப்பட்டன. அதில் முக்கியமானது போர் நிறுத்தத்தை கண்காணிக்க அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழு விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் அவர்களது கண்காணிப்பையும் மீறி விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கொண்டுவரும் கப்பல்கள் அவர்களை வந்தடைகின்றன எனவும் பிரச்சாரம் முக்கியமடைந்தது.



புலிகளுடன் பேச்சு முட்டுக்கட்டையை நீக்க முயலும் நோர்வே அமைச்சர் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வே அனுசரணையாளர் ஹன்சன் போவர்

**221. நோர்வே இவற்றைக் கணக்கெடுத்ததா?**

இவற்றைக் கணக்கெடுத்து, விடுதலைப் புலிகளின் இடைக்கால சபை (ISGA), போர் நிறுத்த கண்காணிப்புக் குழு, தொடர வேண்டிய நேரடி பேச்சுவார்த்தைகள் என்பன பற்றிய பேச்சுக்களுக்காக விடுதலைப் புலிகளையும் ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகளையும் ஒஸ்லோவுக்கு 5 - 9 ஜூன் 2006இல் அழைத்தது. அதற்கு தமிழ்ச்செல்வன் தலைமையில், பொலிஸ் பாதுகாப்பு பிரிவின் நடேசன், சமாதான நிலையத்தின் புலித்தேவன் ஆகியோர் சென்றனர். ஆனால் அந்த தராதரத்தில் அரசாங்கத்திலிருந்து ஒருவரும் வராமல் மூன்றாம் மட்டத்திலிருந்து அரச சமாதான செயலக செயலாளர் பாலித கொஹன்னவும், பொலிஸ் படை அதிகாரிகளும் அனுப்பப்பட்டிருந்தமையால் விடுதலைப் புலிகள் அவர்களைச் சந்திக்க மறுத்தனர். பின்னர் புலிகளின் சமாதான செயலக செயலாளர் புலித்தே வன் மாத்திரம் பாலித கொஹன்னவை சந்திக்க சம்மதித்தாலும் அது நடைபெற வில்லை.



புலிகளை வரவேற்க ஒஸ்லோ விமான நிலையத்தில் கூடிய தமிழர்கள்

இதற்கிடையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 30 மே 2006இல் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத பட்டியலில் இணைத்த தாலும், போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களில் பலர் அந்த நாடுகளிலிருந்ததாலும் விடுதலைப் புலிகள் அவர்களை தொடர்ந்து ஏற்க மறுத்து அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தனர்.

இவை பற்றி இருதரப்பினரோடும் தனித்தனியாக நோர்வே பேசிய பின் விடுதலைப் புலிகள் நாடு திரும்புமுன் தமிழ்ச்செல்வன் 9 ஜூன் 2006 நோர்வேயில் அவர்களது புத்திஜீவிகள் தயாரித்த அதிருப்தி செய்தி அறிக்கையை வெளியிட்டு வைத்தார். அதில் 63 காரணங்களையும் சர்வதேசத்தின் போக்கையும் இலங்கை அரசின் போக்குகளை கணக்கெடுத்தும் விடுதலைப் புலிகளின் தமிழர் தேசியத்துக்கான ஒரு தீர்வை அவர்களின் சுயநிர்ணய உரிமைகளின் ஊடாக தான் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மீள உறுதிப்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.

இதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்களும் சர்வதேசமும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறுகிறார்கள் என்றே தீர்மானித்தனர்.



ஒஸ்லோவில் வந்திறங்கிய புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனும் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசனும்.

**222. தமிழ்ச்செல்வன் விடுதலைப் புலிகளுக்காக அந்த தீர்மானத்தில் சொன்ன செய்தி என்ன?**

இதனை இடைக்கால சபையை (ISGA)ஐ வடிவமைத்த விடுதலைப் புலிகளின் புத்திஜீவிகள் தயாரித்திருந்தார்கள். அதில் போராட்டம் தொடங்கிய நாள் தொட்டு நடந்தவைகளைக் கூறி பேச்சுவார்த்தை காலங்களில் ஸ்ரீலங்கா அரசுகளின் நம்பகத் தன்மைகளும் சுட்டிக்காட்டி, 63 காரணங்கள் சொல்லப்பட்டிருந்தன. ஆனால் சர்வதேசம் புரிந்து கொண்ட சிலவற்றைத் தருகிறேன்.

(வளரும்..........)

# வலி. வடக்கில் காணிகள் விடுவிப்பு வெறும் படத்தோடு முற்றுப்பெறுமா?

ந.லோகதயாளன்




யாழ்ப்பாணம் வலி. வடக்குப் பகுதியில் தற்போதும் படையினர் வசமுள்ள நிலங்களில் இருந்து மேலும் ஆயிரம் ஏக்கரை விடுவிக்குமாறு விடப்படும் கோரிக்கைக்கு தீர்வு கிட்டுமா என அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் ஏங்கித் தவிக்கின்றனர்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி 2ஆம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த போது 19ஆம் திகதி விரட்டியடிக்கப்பட்ட மக்கள் இன்று 32 ஆண்டுகள் கடந்தும் தமது சொந்த நிலத்தைப் பார்க்கக் கூட முடியாமலேயே வாழ்கின்றனர். இதில் பலர் புலம் பெயர்ந்து வாழ்வது மட்டுமன்றி புலம்பெயர் தேசங்களில் நிரந்தரமாகக் குடியமர்ந்தும் விட்டனர். இதேநேரம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்றும் 17 இடைத் தங்கல் முகாம்களில் 314 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து இருநூறுபேர் தங்கியுள்ளமையோடு பல ஆயிரம் பேர் நாட்டின் ஏனைய பகுதிகளில் சிதறி நிலைகொண்டு தமது காலத்தை ஓட்டுகின்றனர். முகாம்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்தபோதும் முகாம் வாழ்வு சர்வதேச ரீதியில் என்றும் அழுத்தத்தை ஏற்படுத்தும் என உணர்ந்த அரசுகள், தனியார் நிலங்களை கொள்வனவு செய்து, 2 பரப்புக் காணிகளை வழங்கி, வீட்டு வசதியை ஏற்படுத்தி, 'முகாம் வாழ்வு' என்ற சொற்பதத்தை குறைத்துக்கொண்டது.

**சர்வதேசத்தை ஏமாற்றவா நில விடுவிப்பு முயற்சி?**

இன்று நாடு முழுவதும் சிதறி வாழும் மக்களையும், முகாம்களில் தொடர்ந்தும் அவலத்தை எதிர்கொள்வோரையும் கருத்தில்கொண்டு, படையினர் வலி. வடக்கில் தற்போதும் தமது பிடியில் வைத்திருக்கும் 3,457 ஏக்கர் நிலத்தில் இருந்து 4 இடங்களில் ஆயிரத்து 5 ஏக்கரை விடுவிப்பதன் மூலம் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் கணிசமானோரினதும், முகாம்களில் வழ்பவர்களின் முழுமையான பிரச்சினைக்கும் தீர்வு எட்ட முடியும் என கடந்த 5 ஆண்டுகளாக படைத்தரப்பிற்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தத் திட்டம் நல்லாட்சி அரசில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான படங்களும் தயாரிக்கப்பட்டன. இருந்தபோதும் நிலம் மட்டும் விடுவிக்கப்படவேயில்லை.

சர்வதேச அழுத்தத்தை குறைப்பதானால் தற்போது அரசியல் கைதி விடயம், காணமல் போனோர் விடயம், நில விடுப்பு போன்ற முக்கிய விடயங்களில் புதிய தீர்மானங்களை எடுக்க வேண்டும். அதன் மூலம. சர்வதேசத்தை சாந்தப்படுத்த முடியும் என அரசு எண்ணுகிறது போலும்.

இதற்காக அரசியல் கைதிகள் விடயம் ஏற்கனவே கையில் எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்து நில விடுவிப்பிலும் ஓர் கணிசமான முன்னேற்றத்தை காட்ட அரசு எண்ணுகிறது. இதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலம் காய் நகர்த்தப்படுகின்றது.

இதற்காகக் குடாநாட்டின் வலி. வடக்கில் படையினர் நிலை கொண்டுள்ள நிலப்பகுதி தொடர்பான வரைபடம், படையினரிடம் உள்ள நிலத்தில் ஏற்கனவே விடுவிக்கப்பட சம்மதிக்கப்பட்ட பகுதி என்பன தனதத் தனியே அடையாளப்படுத்திய விவரங்கள் அமைச்சர் ஊடாகக் கோரப்பட்டது. இதனால் அமைச்சரும் மாவட்டச் செயலக காணிச் செயலகம் ஊடாக விவரங்களைத் திரட்டினார். இதன்போது வலி. வடக்கில் படையினர் வசம் உள்ள 3,457 ஏக்கர் நிலத்தில் 400 ஏக்கர் 1958 ஆம் ஆண்டு முதல் படையினர் வசம் உள்ளதனால் அவை தவிர்ந்து எஞ்சிய 3 ஆயிரத்து 57 ஏக்கர் தொடர்பில் கவனம் திரும்பியது. இதில் கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் 40 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டதாக உரிமையாளருக்கு ஆளுநர் மூலம் சான்றிதழ் வழங்கி உரிமையாளர்களும், சர்வதேசமும் ஏமாற்றப்பட்ட பகுதியும் உள்ளது.

அதேபோன்று பலாலி வீதி கிழக்குத் திசையில் படையினர் வசமுள்ள 689 ஏக்கர் நிலங்கள், ஆகியவற்றுடன் மயிலிட்டி துறைமுகத்தை சூழ மீனவர்கள் வாழ்ந்த கிராமத்தின் 150 ஏக்கர் நிலம் மற்றும் குரும்பசிட்டியில் உள்ள 126 ஏக்கர் என்பன தனித்தனியே அடையாளப் படுத்தப்பட்டு இவற்றின் கிராம சேவகர் பிரிவு, உரிமை கோரும் குடும்பங்களின் எண்ணிக்கை என்பவற்றுடன் மாவட்டச் செயலக அதிகாரி கொழும்பிற்கு எடுத்துச் சென்று பிரதமர் செயலக அதிகாரிகளிற்கும் அமைச்சரிற்கும் தெளிவுபடுத்தி விவரத்தை கையளித்துள்ளார்.

**காங்கேசன்துறை வீதி போன்று பலாலி வீதியையும் திறக்க கோரிக்கை**

மயிலிட்டி மீனவர்களும் , அச்சுவேலி வீதிக்காக பல மைல் தூரம் சுற்றிப் பயணிப்பவர்களோடு பலாலி வீதிக்கு கிழக்கேயுள்ள கிராம சேவகர் பிரிவுகளான ஜே/ 244, 245,252, 253, 254 பகுதி மக்களும் ஆவல்கொண்டனர். ஜூலை மாதம் 7ஆம் திகதி இந்த தரவுகள் வரைபடங்கள் அனைத்தும் கொழும்பிற்கு எடுக்கப்பட்ட போதும் இதுவரை ஜனாதிபதியின் கவனத்திற்கு சென்றதாக எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை. அதனால் நிலவிடுவிப்பு இடம்பெறுவதற்கான உடனடிச் சாத்தியமும் தென்படவில்லை.

**விடுவிக்கப்பட்டதாக சான்றிதழ் வழங்கி ஏமாற்றப்பட்ட பிரதேசம்**

இதேநேரம் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதிய சான்றிதழ் மூலம் விடுவிக்கப்பட்டதாக சான்றுப்படுத்தி வழங்கிய நிலம் 40 ஏக்கரும் தொடர்ந்தும் படையினரின் பிடியிலேயே உள்ளது. ஆக, நடந்த வேறுபாடு என்னவெனில், முன்னாள் ஆளுநர் இன்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார் என்பது மட்டுமே. இதனால் இந்த 40 ஏக்கர் நிலத்தையேனும் விடுவிக்க இந்த நாடாளுமன்ற உறுப்பினரும் குரல் கொடுக்க வேண்டிய கடப்பாடு உண்டு. இந்த 40 ஏக்கர் நிலமும் நகுலேஸ்வரம் பகுதியில் தொடர்ந்தும் கடற்படையினர் வசம் உள்ளது. இதற்குகூட அரச தரப்பில் குரல் இன்னும் காத்திரமாக எழவில்லை.

**நிரந்தரமாகவே மூடப்பட்ட சர்வதேச விமான நிலையம்**

பலாலி விமான நிலையம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாக கடந்த ஆட்சியில் திறப்பு விழா செய்யப்பட்ட இந்த அரசு மூடுவிழா செய்தது. அது மீண்டும் இயக்கப்படுமா அல்லது அந்தக் கருவிகள், இடங்கள் துருப்பிடிக்கின்றனவா என்பது கூடத் தெரியாத நிலைமை. திறக்கப்படும் என யாழ்ப்பாணம் அமைச்சர் இரு தடவை வாக்குறுதி வழங்கியும் அது கிடப்பில் போட்ட திட்டமாகவே உள்ளது. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை நிரந்தரமாகவே மூட இந்த அரசு திட்டமிட்டு விட்டது என 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் எழுதியபோது மறுத்தவர்கள் இன்று ஓர் ஆண்டு கடந்தும் இது விடயத்தில் வாய்மூடி மௌனிகளாக உள்ளனர்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் கரிசனை இருக்குமாயின் கட்டுவன் - மயிலிட்டி வீதியில் வீதியின்றிக் காணப்படுமா ஓர் பகுதியில் வெறும் 35 மீற்றர் தூரம் வேலியைப் பின் நகர்த்த இணங்கி, அதனைச் செம்மைப்படுத்தியிருப்பார்கள். அதைக் கூடச் செய்ய முடியாதவர்களாகவே ஆட்சியாளர்களும், அரசோடு ஒன்றித்தவர்களும் உள்ள நிலைமையில் இவர்கள விமான நிலையத்தைத் திறக்க வைப்பர் என்ற நியாயமான கேள்வியும் உள்ளது.

## விபுலானந்தரின் நினைவு வவுனியாவில் அனுஷ்டிப்பு



சுவாமி விபுலானந்தரின் 74ஆவது நினைவு தினம், வவுனியா - கண்டி வீதியிலுள்ள அவரது சிலைக்கு முன்பாக நேற்று (திங்கட்கிழமை) காலை அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர் வவுனியா தமிழ்சங்கத்தின் தலைவர் தமிழருவி சிவகுமாரன், விபுலானந்தர் தொடர்பான நினைவுபட பேருரையை ஆற்றியிருந்தார்.

இந்த நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர்கள், நகரசபை செயலாளர், நகரசபை உறுப்பினர்கள், பொது அமைப்புகள் என பலரும் கலந்துகொண்டனர்.

## 10 ஆயிரம் பேருக்கு மொடர்னா தடுப்பூசி ஞாயிறு ஏற்றப்பட்டது

இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 5 ஆவது கொவிட் தடுப்பூசியான மொடர்னா தடுப்பூசியை பொதுமக்களுக்கு செலுத்தும் பணி கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கமைய, ஞாயிற்றுக்கிழமை 10 ஆயிரத்து 88 பேருக்கு மொடர்னாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது. இதேவேளை, ஞாயிறு மாத்திரம் 71 ஆயிரத்து 674 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது. மேலும், சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்றுமுன்தினம் 10 ஆயிரத்து 816 பேருக்கு போடப் பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 3 லட்சத்து 85 ஆயிரத்து 885 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டது.

அத்துடன் நேற்றுமுன்தினம் 1,713 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசி போடப்பட்டுள்ள நிலையில் இதுவரை ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 81 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் 14 ஆயிரத்து 464 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அதேபோல், ஞாயிறு 960 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ள நிலையில் இதுவரை 46 ஆயிரத்து 753 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, இலங்கையில் அபிவிருத்தி பணிக ளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரத்து 435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## தொடரும் ஆசிரியர்களின் போராட்டம் கல்வி அமைச்சருடன் இன்று சந்திப்பு

கொழும்பு, ஜூலை 20

ஆசிரியர்கள் மற்றும் அதிபர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில், தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லையெனில், எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் இணையவழிக் கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து விலகி வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வெற்றிகரமான 2 ஆவது ஆண்டில்

இப்போது எல்லா முகவர்களிடமும் கிடைக்கும்

செம்மண்
வாரப் பத்திரிகை

தரமான சமூக அரசியல் பொருளாதார அறிவியல் கட்டுரைகளுக்கான முதன்மை ஊடகம்

வெளிவந்துவிட்டது
53ஆவது இதழ்

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவதற்கு கோட்டா தயார்

## அவரே பகிரங்கமாக அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 20

பலரின் வேண்டுகோளின் பிரகாரம் இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் நான் போட்டியிடுவதற்கு உத்தேசித்துள்ளேன்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எனது திட்டங்களைச் செயற்படுத்த மூன்று வருடங்கள் மாத்திரமன்றி மேலும் 5 வருடங்களும் இருக்கின்றன என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.

நாட்டு மக்களுக்கு நான் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் எனது பதவிக் காலங்களில் நிறைவேற்றியே தீருவேன் என்றும் அவர் உறுதியளித்தார். மக்களை ஏமாற்றுபவன் நான் அல்லன். அவர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதே எனது இலக்கு. அவர்கள் எப்போதும் எனது பக்கமே நிற்கின்றார்கள் என்றும் ஜனாதிபதி அடித்துக் கூறினார்.

இலங்கையில் 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் தற்போதைய நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ போட்டியிடுவார் என 'மொட்டு' கட்சி உறுப்பினர்கள் தெரிவித்து வந்த நிலையிலேயே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த அறிவிப்பும் வெளியாகியுள்ளது. இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் ஒருவர் இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை வகிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். பொலிஸ் நிலையங்களுக்கு ஓட்டோக்கள்






(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு ஓட்டோ வழங்கும் நிகழ்வு யாழ். பிரதம பொலிஸ் நிலையத்தில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் கலந்துகொண்டு பொலிஸ் நிலையங்களுக்கான ஓட்டோக்களை வழங்கி வைத்தார்.

நாட்டில் சட்டம் - ஒழுங்கை நடைமுறைப்படுத்தி குற்றங்களைக் கட்டுப்படுத்தும் முகமாக நாட்டின் பிரதமர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் நாடு பூராகவும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கென 2 ஆயிரம் ஓட்டோக்கள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சால் பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய யாழ்ப்பாணம் மாவட் டத்துக்குக் கையளிக்கப்பட்ட 40 ஓட் டோக்களும் பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று யாழ். பிரதம நிலையத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிக்கக்கார, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே ஆகியோர் கலந்துகொண்டு யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளிடம் ஓட்டோக்களைக் கையளித்தனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் தலா இரண்டு ஓட்டோக்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## யாழ்., முல்லையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 5 பேர் 3 மாதங்களின் பின் விடுவிப்பு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ்பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட 5 பேர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஐவரிடம் விசாரணைகள்நிறைவடைந்தநிலையில் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் எவையும்இல்லாததால்வழக்கைத் தொடர முடியவில்லை என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தையடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் முனைப்பில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த ஏப்ரல் 17ஆம் திகதி ஐவர் கைது செய்யப்பட்டனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அவர்களது வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்களுள் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவரும் அடங்குகின்றார்.

இதேவேளை, இளவாலை பொலிஸ் பிரிவில் இருவரும், கோப்பாய் மற்றும் பலாலி பொலிஸ் பிரிவுகளில் தலா ஒருவரும் என நால்வர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஏப்ரல் மாத முற்பகுதியில் இந்தியாவில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டவர்களுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே நால்வரும் கைதுசெய்யப்பட்டனர் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், மூன்று மாதங்களின் பின்னர் சந்தேகநபர்கள் ஐவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப் பட்டனர்.

ஐவருக்கும் எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவின் கீழ் 'பி' அறிக்கை தாக்கல் செய்யப் பட்டது.

சந்தேகநபர்கள் ஐவரிடம் விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் எவை யும் இல்லாததால் வழக்கைத் தொடர முடியவில்லை என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதனால் சந்தேகநபர்கள் ஐவரையும் வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## மேலும் 245 பேர் சிக்கினார்கள்!

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய மேலும் 245 பேர் கடந்த 24 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நேற்றுக் காலை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 994 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தனிமைப்படுத்தலை மீறுவோரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் உட்பிரவேசிக்கும் பகுதிகளில் 3 ஆயிரத்து 401 பேரும் அவர்கள் பயணித்த 2 ஆயிரத்து 584 வாகனங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அனுமதியின்றி மாகாணத்தை விட்டு வெளியேற மற்றும் உட்பிரவேசிக்க முற்பட்ட 293 பேர் அவர்கள் பயணித்த 139 வாகனங்களிலேயே திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு தொடர்ந்தும் அமுலில் உள்ளதால் அது தொடர்பில் கருத்தில்கொண்டு செயற்படுமாறு பொலிஸ் பேச்சாளர், பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## தமிழ் ஊடகத்துறையின் ....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில சமயங்களில் மாலை வேளையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் அவரைச் சந்திப்பேன்.

*"என்ன சேர் இன்று நேரத்தோடை வேலை முடிச்சு போட்டியள் போல....?"* என்பேன் நான்.

*"ஓமடா தம்பி. நேரத்துடன் வந்துட்டன். அங்கே பேப்பரிலை என்ன 'பளாயை' (இது அவரின் சொற்பிரயோகம்) போட்டு வைக்கிறாங்களோ, நாளைக்கு என்ன சிக்கலோ தெரியாது..."* என்று அலுத்துக் கொள்வார் அவர்.

ஆனால், சிவநாயகம் ஐயாவின் ஆசிரிய பீடம் அப்படியல்ல. அது ஐயாவின் கருத்து நிலைப்பாட்டிலிருந்து இம்மியும் பிசகாது. ஏதேனும் ஒரு விடயத்தில் அவரின் கண்களுக்கு ஒன்றும் ஒன்றும் மூன்றாகத் தெரிந்தால், ஆசிரிய பீடத்தினர் அனைவரினதும் கண்களுக்கும் அது மூன்றாகத்தான் தெரியும். தன்னுடைய தகுதியினால் அத்தகைய கட்டுப்பாட்டை - ஒழுங்கை - அவர் ஏற்படுத்தியிருந்தார்.

உதயனிலும், சுடர் ஒளியிலும் இருந்த காலத்திலும் நானும் அந்த நிலையை ஓரளவு வெற்றிகரமாகப் பேணினேன். காலைக்கதிரிலும் அது தொடர்கின்றது. அது ஐயா காட்டிய வழி.

(வளரும்)

# டெவோன் நீர்வீழ்ச்சியில் விழுந்து யுவதி மாயம்

## தேடும் பணி தொடர்ந்து முன்னெடுப்பு



திம்புளை - பத்தனை டெவோன் நீர்வீழ்ச்சியில் தவறி விழுந்து காணாமல் போயுள்ள யுவதியை தேடும் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை - லிந்துலை லென்தோமஸ் தோட்ட பகுதியைச் சேர்ந்த 19 வயதான மணி பவித்ரா என்ற யுவதியே குறித்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை, நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்ற 4 பெண்களில் ஒருவரே, இவ்வாறு நீர்வீழ்ச்சியில் தவறி விழுந்துள்ளார் என திம்புளை - பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் நீர்வீழ்ச்சியின் உச்சிக்கு கால் கழுவ சென்ற யுவதி ஒருவரே, இவ்வாறு கால் வழுக்கி நீர் வீழ்ச்சியில் விழுந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கடந்த ஞாயிறு மாலை முதல் இரா ணுவத்தினர், பொலிஸார் மற்றும் விமான படையினர் ஆகியோர் இணைந்து, காணாமல் போயுள்ள யுவதியை தேடும் நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக திம்புளை - பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

# மஹிந்தவின் நிதியமைச்சுப் பறிப்புக்கு எரிபொருள் விலையேற்றமா காரணம்?

## மரிக்கார் கேள்வி



நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடித்தாலும், மக்களிடமிருந்து ஒருபோதும் தப்பித்துக்கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நிதியமைச்சுப் பதவி பறிக்கப்பட்டமைக்கு எரிபொருள் விலையேற்றமா காரணம் என்றும் அவர் கேள்வியெ ழுப்பியுள்ளார்.

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

'கொரோனாவால் மக்களின் வாழ்வாதாரம் பெரும் சவாலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், எரிபொருள்களின் விலையை உயர்த்தி, எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மேலும் மக்களை சிக்கலுக்கு உட்படுத்தியுள்ளார்.

இதற்கு ஆளும் தரப்பு உறுப்பினர்களே எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில், எரிபொருள் விலையேற்றத்துக்குத் தான் காரணமில்லை என்றும், நிதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாகவே எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதாகவும் அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்திருந்தார்.

அப்படியென்றால் ஆளும் தரப்பு உறுப்பினரான சாகர காரியவசம் உள்ளிட்டவர்கள் நிதியமைச்சராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ மீதா குற்றம் சுமத்துகிறார்கள்? இதற்கா கத் தானா அவரது நிதியமைச்சுப் பதவியும்பறிக்கப்பட்டது? இவ்வாறான நாடகங்களை அரங்கேற்றி மக்களை முட்டாளாக்க முற்படக்கூடாது.

இந்த அரசாங்கம் எரிபொருள் பெப்ரலின் விலை சர்வதேச ரீதியாக குறைந்தபோதும்கூட, எரிபொருளின் விலையைக் குறைக்கவில்லை. அரசாங்கம் திரை மறைவில் ஒரு நாடகத்தையே அரங்கேற்றி வருவதாலேயே நாம் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளோம்.

இதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கத் தரப்பினர் தோல்வியடைச் செய்தாலும், மக்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த அரசாங்கம்தான் இலங்கை வரலாற்றிலேயே மிகவும் மோசமான அரசாங்கமாகக் காணப்படுகிறது.

முடிந்தால் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள பஸில் ராஜபக்ஷ, எரிபொருள் விலையேற்றம் தொடர்பாக நாடாளுமன்றில் உரையாற்றுமாறு நான் சவால் விடுக்கிறேன். தேர்தலொன்று இடம்பெற்றால் இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க மக்கள் தயாராக உள்ளார்கள்' – என அவர் மேலும் தெரிவித்தார்.




# அதிபர்கள்; ஆசிரியர்கள் போராட்டம் பத்தரமுல்லவில் கடும் வாகன நெரிசல்!



பத்தரமுல்ல பன்னிபிட்டிய பிரதான வீதியின் பெலவத்த பகுதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிபர்கள், ஆசிரியர்கள் இணைந்து கல்வி அமைச்சுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்தே, கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஹெரோயின் போதைப்பொருளுடன் சிறைச்சாலைக் காப்பாளர் கைது

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரை கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை - மட்கோ, மஹமாயபுர பகுதியைச் சேர்ந்த ஏ.துலாஜ் மதுசங்க (30வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலுக்கு அமைவாக குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தர் சென்ற மோட்டார் சைக்கிளை சோதனையிட்ட போது அவரிடமிருந்து 14 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

குறித்த நபர் திருகோணமலை சிறைச்சாலையில் கடமையாற்றி வரும் சிறைச்சாலைக் காப்பாளர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், கைது செய்யப்பட்ட குறித்த நபரை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# 12 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவது தொடர்பில் ஆராய்வு

இலங்கையில் 12 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்துவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக மருந்து உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - 'நாம் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஆரம்பத்தில் கொரோனாத் தடுப்பூசியை வழங்கினோம்.

இதனைத் தொடர்ந்து 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தற்போது தடுப்பூசி ஏற்றப்படுகிறது. 18 வயதிற்கு மேற்பட்டோருக்கும் தற்போது தடுப்பூசி ஏற்றப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக 12 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பாக நாம் தற்போது கவனத்திற் கொண்டுள்ளோம்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை முறையாக முன்னெடுக்க வேண்டும் என்பதினாலேயே இவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்'- என்றும் மருந்து உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன மேலும் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.07.2021 இல் வெளியிடப்பெற்றது.